உ

179.

திருவருள் துணை.

# குமரகுருபரன்



மலர் 28 || பிங்கள ஞூ சித்திரை மீ 1உ [13—4—77] || இதழ் 4

நமச்சிவாயவே ஞானமுங் கல்வியும்
நமச்சிவாயவே நானறி விச்சையும்
நமச்சிவாயவே நாநாவின் றேத்துமே
நமச்சிவாயவே நன்னெறி காட்டுமே.

திருச்சிற்றம்பலம்

## சைவ சமயத்தின் மாண்பு 10

ஸ்ரீலஸ்ரீ அருணகிரிநாத ஸ்ரீ ஞானசம்பந்த தேசிக
பரமாச்சாரிய சுவாமிகள்,
இளவரசு, மதுரை ஆதீனம்.

நமது மதுரை ஆதீனத்தை கடந்த ஆறும் நூற்றுண்டில் நிறுவியருளிய திருஞானசம்பந்தப்பெருமான்தனது மூன்ருவது வயதில் சிவபெருமான் கட்டளைப்படி உமாதேவியார் தந்த ஞானப்பாலை உண்டு அதன் மூலம் சிவஞானம் பெற்று 'திருஞானசம்பந்தராகி' தேவாரத்திருப்பதி கம்பாடியருளினர்

2 திருக்கோலக்கா என்னும் திருத்தலத்தில் சிவபெருமான் வழங்கிய திருவைந்தெழுத்துப் பொறிக்கப் பெற்ற தங்கத்திலைாகிய தாளங்களை ஓசை உடையவனவாகப் பெற்ருர்.

3 திருநெல்வாயில் அரத்துறை என்னும் திருத்தலத்தில் சிவபெருமான் இவருக்கு முத்துச்சிவிகையும், முத்துக்குடையும், முத்துச் சின்னங்களும் கொடுத்தருளினர்.

4 திருப்பாச்சிலாச்சிரமம் என்னும் திருத்தலத்தில்வாழ்ந்திருந்த "கொல்லி மழவன்" என்பவனது புதல்வி "முயலகன்" என்னும் தீராதநோயால் துன்புற, இறைவனை நோக்கிப் பதிகம்பாடி அந்நோயை நீக்கியருளினர்.

5 திருச்செங்கோடு என்னும் திருத்தலத்தில் உடன் வந்த சிவனடியார்களுக்கு உண்டாகிய குளிர் சுரத்தைப் பதிகம்பாடி நீக்கி அருளினர்.

6 திருப்பட்டீச்சுரம் என்னும் திருத்தலத்தில் வேனிற் காலத்து வெயில் வெப்பத்தைத் தணிப்பதற்கு இறைவன் வழங்கிய முத்துப் பந்தரைப் பெற்ருர்

7 திருவாவடுதுறை என்னும் திருத்தலத்தில், தனது தந்தையாராகிய சிவபாத இருதயர் விருப்பப்படி அவர் செய்ய

எண்ணிய வேள்விக்காகப் பதிகம் பாடி சிவபெருமானிட மிருந்து ஆயிரம் பசும் பொற்காசுகள் அடங்கிய பொன் முடிப்பைப்பெற்று வழங்கியருளினர்.

8 திருமருகல் என்னும் திருத்தலத்தில் பாம்பு தீண்டி இறந்த வணிகன் ஒருவனைப் பதிகம் பாடி உயிர் பெற்றெழச் செய்தருளினர்

9 திருவீழி மிழலை என்னும் திருத்தலத்தில் சிவனடியார் களுக்கு திரு அமுது ஊட்டுவதற்காகக் சிவபெருமானது திரு வருளால் நாள்தோறும் கிடைத்தபடிக் காசுகளைக் கொண்டு பஞ்சம் தீரும்வரை, பலரது பசியை நீக்கியருளினர்.

10 திருமறைக்காடு என்னும் வேதாரணியத் திருக்கோயி லின் நேர்முகக் கதவு வேதங்களால் பூட்டப்பெற்று நெடுங் காலமாகத் திறக்கப்படாமல் இருந்ததை, திருநாவுக்கரசு சுவாமிகள் பதிகம் பாடித்திறப்பிக்க, இவர் பதிகம் பாடி மீண் டும் பூட்டவும், திறக்கவும் அருளினர்.

11 மதுரைத் திருப்பதியில் அடியார்களோடு தங்கியிருந்த திருமடத்தில் சமணர்கள் வைத்த தீ பற்றுதிருக்கவும், அத் தீயின் வெப்பம் பாண்டிய மன்னனைச் சாரவும், பதிகம் பாடி அருளினர்.

12 பாண்டிய மன்னனது வெப்புநோய் சமணர் களால் தீர்க்க முடியாமலிருக்க அது அவனைவிட்டு நீங்கும் படி, பதிகம்பாடி திருநீறு பூசி அருளினர்.

13 சமணர்களோடு புரிந்த வாதத்தில் அவர்களது மந்திரம் எழுதப்பெற்று நெருப்பிலிடப்பட்ட அவர்களது ஏடு எரிந்து சாம்பலாகவும், தேவாரத் திருப்பதிகம் எழுதிய தனது ஏடு நெருப்பில் வேகாமல் பச்சையாக விளங்கவும் அருளினார்.

14 வைகையாற்று வெள்ளத்தில் இட்ட சமணர்களின் மந்திரம் பொறித்த ஏடு ஆற்று வெள்ளத்தில் அடிபட்டுச் செல்லவும், தேவாரத் திருப்பதிகம் பொறித்த தனது ஏடு அதில் எதிரேறிச் செல்லவும், அருளினார்

15 திருக்கொள்ளம்பூதூர் என்னும் திருத்தலத்தில் முள்ளி நதி வெள்ளத்தில் திருப்பதிகம் பாடி அதன் வல்லமையினாலேயே வேறுகோல் ஒன்றும் இன்றி ஓடத்தை மறுகரை சேரும்படி அருளினார்.

16 போதிமங்கையில் இருந்த "புத்தநந்தி" என்பவனது துடுக்கை அடக்குவதற்காக அவனது தலையில் இடி விழும்படி தமது அடியவர் ஒருவர் மூலம் செய்தருளினார்.

17 திருவோத்தூர் என்னும் திருத்தலத்தில் ஆண்பனைகள் பலவற்றைப் பதிகம் பாடிப் பெண் பனைகளாக்கி அருளினார்.

18 திருமயிலாப்பூர் என்னும் திருத்தலத்தில் சிவநேசர் என்பவரது மகளாகிய பூம்பாவை என்னும் பெண்மணி, மலர் கொய்யும்போது பாம்புதீண்டி இறக்க அவளது பூத உடம்பைச் சுட்டு எலும்பையும், சாம்பலையும் ஒரு குடத்

தில் சேமித்து வைத்திருந்தார்கள் அக்குடத்தை கபாலீச்சரத்திற்குக் கொண்டு வரச்செய்து, பதிகம் பாடி பல ஆண்டுகளுக்கு முன் இறந்துபோன பூம்பாவையை அதுவரையில் உள்ள ஆண்டு வளர்ச்சியுடன் குடத்திலிருந்து வெளிவரும்படி பதிகம்பாடிச் செய்தருளினர்

19 இறுதியாக திருநல்லூர்ப் பெருமணம் என்னும் திருத்தலத்தில் இவ்வுலக வாழ்க்கையிலிருந்து தன்னை அழைத்துக் கொள்ள வேண்டும் என்று, சிவபெருமானிடம் வேண்டி உடனிருந்த அனைவரையும் கூட்டிக் கொண்டு அங்கு தோன்றிய ஜோதியில் கலந்து பேரின்பப் பேறுபெற்றூர்.

அடுத்து அப்பர் பெருமானின் அற்புதச் செயல்களை நோக்கலாம். சுவாமிகள் தமக்கு வந்த கொடிய சூலை நோயைத் திருவதிகை வீரட்டானத் திருத்தலத்தில் எழுந்தருளியுள்ள சிவபெருமான் மீது பதிகம் பாடித் தீர்த்துக் கொண்டார்.

2 சமணர்கள் இட்ட நீற்றறையில் ஏழுநாட்கள்இருந்து எந்தவிதமான ஊறுபாடுமின்றி, சிவபெருமான் திருவருளால் வெளிவந்தார்.

3 சமணர்கள் ஊட்டிய நஞ்சு கலந்த பாற்சோற்றை உண்டும் இறைவன் அருளால் உயிருடன் இருந்தார்.

4 சமணர்களால் தன்னைக் கொல்லும்படி ஏவி விடப்பட்ட யானையைத் தன்னை வலம் வந்து பணியும்படி செய்தார்

5 சமணர்களால் தன்னைக் கல்லிற்கட்டிக் கடலில் போட, அக்கல்லையே தெப்பமாகக் கொண்டு மிதந்து கரை சேர்ந்தார்.

6 திங்களூர் அப்பூதி அடிகளின் மூத்த மகன் பாம்பு தீண்டி இறக்க, பதிகம் பாடி அவனை உயிர்ப்பித்தருளினர்

7 சிவனடியார்களுக்கு அமுது ஊட்டுவதற்காகத் திரு வீழிமிழலையில் சிவபெருமான் நாள்தோறும் அருளிய பொற் காசுகளைப் பெற்றுப் பஞ்சம் தீரும்வரைப் பலரது பசியைத் திர்த்தருளினர்.

8 திருமறைக் காட்டில் வேதங்களால் பூட்டப் பெற்ற திருக்கோயில் கதவைப் பதிகம் பாடித் திறந்தருளினர்.

9 திருப்பைஞ்ஞிலிக்குச் செல்லும் மார்க்கத்தில் இவர் பசியால் வருந்துவதைச் சிவபெருமான் அறிந்து, தாம் ஒரு பிராமண வேடம் பூண்டு வந்து இவருக்குக் கட்டமுது கொடுத்து இவரது பசியைத் தீர்த்து, ஒரு குளத்தையும், சோலையையும்உண்டாக்கி, இவரை அக்குளத்தில் நீர் அருந்தும் படியாகவும், அச்சோலையில் இளைப்பாறும் படியாகவும் செய்தருளினர்.

10 இவர் கயிலாய தரிசனம் செய்ய வேண்டும் என்ற எண்ணத்தோடு காசியைக் கடந்து வெகு தூரத்தில் சென்று கொண்டிருந்த போது. சிவபெருமான் ஒரு பிராமண வேடத் தோடு இவர் எதிரே வந்து இவருடைய உள்ளக் கருத்து என்ன என்று வினவினர். அதற்கு அப்பர் சுவாமிகள் தனது உள்ளக் கருத்தை அப்படியே எடுத்துக் கூறினர். உடனே, சிவபெருமான், ஒரு குளத்தை அவருக்குக் காட்டி, அதில் அவரை மூழ்கச் சொன்னர். அதன்படி அப்பர் சுவாமிகள் குளத்திலிருந்து மூழ்கி எழுந்திருக்கும் போது, திருவை

யாற்றுத் திருக்குளக்கரையில் வெளிப்பட்டுக் கைலாய தரிசனம் செய்தார். பின்னர் கைலாயத் தோற்றம் மாறி, ஆலயமாக இருக்கக் கண்டார்.

11 திருப்புகலூரில் இவர் உழவாரப்பணி செய்து கொண்டிருக்கும் பொழுது, இவர் செதுக்கும் இடங்களில் அனைத்தும், பொன்னும், நவரத்தினங்களும், சிவபெருமான் அருளால் உண்டாக, அவர் அவைகளை மண்ணாகவும், கல்லாகவும் மதித்து பொய்கையில் எறிந்து விட்டார். பின்னும் சிவபெருமான் இவரது மன உறுதிப் பாட்டை உலகுக்கு உணர்த்த அழகான பெண்களை அனுப்பினார். ஆனால், அப் பெண்கள் இவரை மயக்க முடியாமல் வெட்கிப் போயினர்.

12 இறுதியாக, திருப்புகலூரில் இறைவனது திருவடியை அடைய விரும்பி, ''புண்ணியா உன்னடிக்கே போதுகிறேன்'' என்று பாடிச் சிவபெருமானோடு இரண்டறக்கலந்தார்.

(தொடரும்)



# அருள் மொழி அமுது.

34. கழுமல முதுபதிகவுணியர்
D. கன்னியின் கண்ணீர் துடைத்தார்

திரு. ஸ்ரீ ராமநாமப்பரதேசி அவர்கள்,
3119, கீழ இரண்டாம் வீதி,
புதுக்கோட்டை-1, திருச்சி மாவட்டம்.

திருச்சிற்றம் பலம்

தருமபுரத்தினின்று புறப்பட்ட சம்பந்த மூர்த்தி திருநள்ளாறு, திருச்சாத்தமங்கை, நாகப்பட்டினம், கீவளூர், திருச்செங்காட்டங்குடி முதலானவை கடந்து திருமருகல் வந்து சேர்ந்தார் திருநள்ளாற்றில் "போகமார்த்த பூண் முலையாள்" பதிகம் பாடினர். இது மிகப்பிரசித்தமானது. (பின்னர் காண்போம்)

பைங்கோட்டு மலர்ப்புன்னைப் பறவைகாள் ! பயப்பூரச்
சங்காட்டம் தவிர்த்தென்னைத் தவிரா நோய் தந்தானே !
செங்காட்டங்குடிமேய சிறுத்தொண்டன் பணிசெய்ய
வெங்காட்டுள் அனலேந்தி விளையாடும் பெருமானே.

எனத்திருச்செங்காட்டங்குடியில் சிறுத்தொண்ட நாயனுரைச் சிறப்பித்துப் பாடினர்.

திருமருகல் என்ற தலத்திற்கு சம்பந்த மூர்த்தியார் வந்த போது கோயிலின் வாயிலில் ஒரு பெண் விடந்தீண்டப்பெற்ற ஆண் மகனுக்குப் பக்கத்தில் நின்று கொண்டு, கோயிலை நோக்கிக் கைதொழுது " தேவர்கள் அழியாதிருக்க அமுத முண்டு காத்தருளிய பெருமானே! விடப்பாம்பையணிந்த பெருமானே! இரதி வேண்டிக் கதறி அழுததற்காக அவனுக்கு உயிரளித்த உத்தமனே!

அடியராம் இமையவர் தம் கூட்டம் உய்ய
அலைகடல்வாய் நஞ்சுண்ட அமுதே: செங்கண்
நெடியானும் நான்முகனும் காணக் கோல
நீல விட அரவணிந்த நிமலா! வெந்து
பொடியான காமன் உயிர் இரதி வேண்டப்
புரிந்தளித்த புண்ணியனே! பொங்கர் வாசக்
கடியாரும் மலர்ச் சோலை மருங்கு சூழும்
கவின் மருகற் பெருமானே காவாய்" என்றும்

மலர்ச் சோலையருகில் என்னை மலரிழக்கச் செய்யலாமா? என்று புலம்பினள். 'பாலனுக்காகக் காலனை எட்டி உதைத்த திருவடியோய்! என்னைத் துன்பத்திலிருந்து விடுவிக்கலாகாதா?" என்றனள்

வந்தடைந்த சிறுமறையோன் உயிர்மேற் சீறி
வருங்காலன் பெருங்கால வலயன் போலும்
செந்தறு கண் வெள்ளெயிற்றுக் கரிய கோலம்
சிதைந்துருள உதைத்தருளும் செய்யதாளா!
இந்த விடக் கொடுவேகம் நீங்குமாறும் யான்
இடுக்கட்குழி நின்று ஏறு மாறும்
அந்திமதிக் குழவிவளர் செய்ய வேணி
அணி மருகல் பெருமானே அருளாய்" என்றும்

கதறினள். அவளைக் கண்டு இரங்கிய சம்பந்தப் பிள்ளையார் "உன் துயரத்தின் காரணம் என்ன? உன் வரலாறு என்ன? "எனக் கேட்டனர். "வைப்பூர் என்ற ஊரில் தாமன் என்பவர் என் தந்தை அவர்களுக்கு ஏழு பெண்கள். நான் கடைசிப் பெண். இவர் என் தந்தையின் சகோதரியின் மகன். என் சகோதரிகள் ஒருவரை இவருக்குக் கொடுப்பதாக என் தந்தை இவரிடம் பொருள் பெற்று, ஒவ்வொரு பெண்ணையும் அயலாருக்கே திருமணம் முடித்து வைத்தார். ஆறு தடவைகள் ஏமாந்த இவரைக் கண்டு மனமிரங்கி நான் இவரைத் திருமணம் செய்து கொள்ளலாம் என எண்ணி என் தாய் தந்தையருக்குத் தெரியாமல் இவருடன் புறப்பட்டு வந்தேன். இவ்விடத்தில் இவரைத் தீடீரென்று பாம்பு கடித்து விட்டது இனி என்ன செய்வேன் "எனக் கூறிப் புலம்பினர். சம்பந்தமூர்த்திகள் அவ்வணிகனின் உடலிலிருந்தவிடம் நீங்குமாறு இறைவனை வேண்டிப் பாடினர்.

சடையானை எவ்வுயிர்க்கும் தாயானானைச்
சங்கரனைச் சசி கண்ட மவுலியானை
விடையானை வேதியனை வெண்ணீற்றானை
விரவாதார் புரமூன்றும் எரியச் செற்று
படையானைப் பங்கயத்து மேயினானும்
பாம்பணையில் துயின்றானும் பரவும் கோலம்
உடையானை ,, உடையானே தகுமோ இந்த
ஒள்ளிழையாள் உள்மெலிவு'' என்றெடுத்துப் பாட

## திருச்சிற்றம் பலம்
## ( திருமருகல் தேவாரம் )

சடையாய் எனுமால் சரணீயெனுமால்
விடையாய் எனுமால் வெருவா விழுமால்
மடையார் குவளை மலரும் மருகல்
உடையாய் தகுமோ இவளுள்? மெலிவே
வயஞானம் வல்லார் மருகற் பெருமான்
உயர் ஞான முணர்ந் தடி யுள்குதலால்
இயல் ஞான சம்பந்தன பாடல் வல்லார்
வியல் ஞால மெல்லாம் விளங்கும் புகழே.

## திருச்சிற்றம்பலம்.

விடந்தீர்ந்து எழுந்து நின்ற வணிகனை அந்தப்பெண்ணுக்குத் திருமண முடித்து ஆசி கூறியருளினர். சம்பந்தப் பெருமான். பின்னர் மீண்டும் திருச் செங்காட்டங்குடி சென்று தங்கிய காலத்தில் இறைவனது காட்சி கிடைத்தது.

பின்னர் புகலூர் சென்று முருக நாயனரால் எதிர்கொண்டழைக்கப்பட்டு.

## திருச்சிற்றம்பலம்.

தொண்டர் தண்கயம் மூழ்கித்
துணையலும் சாந்தமும் புகையும்
கொண்டு கொண்டாடிப் பரவிக்
குறிப்பறி முருகன் செய் கோலம்
கண்டு கண்டு கண் குளிரக்
களிபரந்தொளி மல்குகள்ளார்
வண்டு பண் செயும் புகலூர்
வர்த்தமானீச் சரத்தாரே

திருச்சிற்றம்பலம்.

என்று தேவாரம்பாடி, திருப்பதிகத்தில் முருக நாயனுரையும் சிறப்பித்தார். அங்கிலேயில் திருவாரூர்ப் பெருமானைத் தெரிசித்து அப்பர் சுவாமிகள் திருப்புகலூர் வந்தனர். திருவாரூரைப் பற்றிக் கேள்வியுற்ற சம்பந்தப் பெருமான் அவ்விடம் சென்று இறைவனை வணங்கினுர். திருவாரூரில் ஒளிகண்டு பாடினுர்.

திருச்சிற்றம்பலம்.

பருக்கையானை மத்தகத் தரிக்குலத்துகிர் புக
நெருக்கிய வாய நித்திலந் நிரக்கு நீள் பொருப்பனூர்
கருக் கொள் சோலை சூழ நீடு மாட மாளிகைக் கொடி
அருக்கண் மண்டலத் தணுவு அந்தணுரு ரென்பதே

திருச்சிற்றம்பலம்.

மலர்தூவி

திருச்சிற்றம்பலம்.

சித்தம் தெளிவீர்காள் — அத்தனுரூரை
பத்தி மலர் தூவ — முத்தியாகுமே

திருச்சிற்றம்பலம்.

என்று திருவிருக்குறள் பாடினுர்.

எதிர் கொண்டழைத்த அடியார்களை வணங்கி, "என்னை இறைவன் ஏற்றுக் கொள்ளுவாரோ? "

திருச்சிற்றம்பலம்.

அந்தமாயுல காதியுமாயினுன்
வெந்த வெண்பொடிப் பூசிய வேதியன்
சிந்தையே புகுந்தான் திருவாருரெம்
எந்தை தானெனை யேன்று கொளுங்கொலோ?

திருச்சிற்றம்பலம்.

என ஏங்கிப் பணிந்தார்.

தேவாசிரிய மண்டபம் தொழுது, பணிந்து உருகியதை

பணிந்து வீழ்ந்தனர் பதைத்தனர் பரவிய புளகம்
அணிந்து மேனி யோடாடினர் பாடினர் அறிவில்
துணிந்த மெய்பொருளானவர் தமைக் கண்டு துதிப்பார்
தணிந்த சிந்தையின் விரைந்தெழு வேட்கையில் தாழ்ந்தார்

என்றவாறு வர்ணிக்கிறது சேக்கிழாரின் மந்திரக் கவிதை திருவலிவலம், திருக்கோளிலி, திருக்காறாயில் சென்று வணங்கி திருவாரூர் சேர்ந்தனர். சின்னுட்களுக்குப் பின் திருப்புகலூர் திரும்பி அவ்விடத்தில் அப்பர் சுவாமிகள். திருநீல நக்கர், முருக நாயனர், சிறுத்தொண்டர் ஆகிய பெரியவர்களுடன் இறை சிந்தனையுடன் பொழுது போக்கினர்.

பின்னர் அப்பரின் வேண்டுகோளின் படி முத்துச் சிவிகையில் ஏறி, அம்பர் மாகாளம், திருக்கடவூர், திருவாச்சூர், மீயச்சூர், பாம்புரபுரம் முதலான தலங்களை தரிசித்து திருவீழிமிழலைசேர்ந்தார். அப்பர் முன் நடந்து செல்ல, அவர் பின் சிவிகையில் வந்தனர்.

திருமால் கொணர்ந்த விண்ணிழி விமானம் என்று கோயிலுக்குப் பெயர், சீர்காழியிலிருந்து வந்த அன்பர்கள் சம்பந்தமூர்த்தியை சீர்காழிக்கு அழைத்தனர். இறைவன் சம்பந்தப் பெருமானது கனவில் தோன்றி "சீகாழிக் காட்சி திருவீழிமிழலையிலேயே காட்டுகிறோம்" என்றார்.

தோணியில் நாம் அங்கிருந்த வண்ணம்
தூமறை வீழி மிழலை தன்னுள்
சேணுயர் விண்ணின்றிழிந்த இந்தச்
சீர் கொள் விமானத்துக் காட்டுகின்றோம்;
பேணும்படியால் அறிதி என்று
பெயர்ந்தருள் செய்யப் பெருந் தவங்கள்
வேணு புரத்தவர் செய்ய வந்தார்
விரவும் புளகத் தொடும் உணர்ந்தார்.

கனவு கலைந்து எழுந்ததும் அதே காட்சி கிடைத்தது. தனது சீகாழி அன்பர்களிடம் ''சீகாழி காட்சி இங்கேயே கிடைத்து விட்டது. எனவே தாங்கள் சீகாழி செல்லுங்கள்'' என விடை கொடுத்த சம்பந்தப்பெருமான் திருவீழிமிழலையிலேயே தங்கினார்.

உ

சிவமயம்

திருச்சிற்றம் பலம்

# ஞானசம்பந்தரும் நற்றமிழும்

தத் புருஷ தேவநாம

திரு. சு இராமலிங்கம் அவர்கள்,

கணித ஜோதிடர், ஸ்ரீ மாணிக்கவாசகர் இல்லம்

சீகம்பட்டி, K. புதுப்பட்டி P.o

இலாலாப்பேட்டை வழி, திருச்சி ஜில்லா

## இரண்டாந்திருமுறை.

(திருச்சிரபுரம்)        திருச்சிற்றம்பலம்    பண் நட்டராகம்.

அன்னமென்னடை அரிவை யொடினிதுறை அமரர்தம் பெருமானுர்.
மின்னு செஞ்சடை வெள்ளெருக்கம் மலர்வைத்தவர் வேதந்தாம்
பன்னு நன்பொருள்பயந் தவர் பருமதிற் சிரபுரத் தார் சீரார்
பொன்னின் மாமலர் அடிதொழும் அடியவர் வினையொடும் பொருந்தாரே

திருச்சிற்றம்பலம்

எல்லையில்லாத கருணையுடையவராகிய சிவகாமசுந்தரியம் மையுடனுகிய நடராசப்பெருமானதுதிருவருட்பெருக்கினுலே திருச்சிரபுரமென்னும் சீகாழிப்பதி திருப்பதிகம் இரண்டாந் திருமுறை நட்டாரகப்பண். திருப்பாடல் விரிவுரை தொடங்கு கிறது அன்னம் போன்று மென்மையான நடையுடைய உமாதேவியை உடனுக வைத்து இனிதாக உறைகின்றவராகிய சிவபெருமான் தேவர்களுக்கெல்லாம் தலைவர் என்பது முதல் அடியின் பொருளாகும். எல்லா உலகங்களிலும்

வசிக்கின்ற பிரமா முதல் புல்'கல் தாவரம் ஈருக எல்லா உயிர்களுக்கும் உயிராக உள் நின்று உயிர்களின் அறிவை இயக்குபவர் சிவபெருமான். உயிர்கள் எத்தொழிலேச் செய்ய முற்பட்டாலும் அவைகளினுடைய அறிவை இயக்கி. அத் தொழிலே ஈடுபடச்செய்து வருபவர் சிவபெருமான் உயிர்கள் தங்கள் தங்கள் வினைக்கேற்ப உலகம். தேசம், குலம் வடிவம், அறிவு தொழில் இவைகளை சிவபெருமான் தனது சத்தி யென்னும் உமா தேவியால் கூட் டிவைக்கிருர் அவைசள் அவ் வவ்வுலகங்களிலுள்ள போகங்களை அநுபவித்துக்கொண்டி ருக் கின்றன. அவைகள் அப்போகங்களை அநுபவிக்க உயிர்க்கு யிராயுள்ள சிவபெருமான் நட்டுவனைப்போல அவ்வவ்வுயிர் களின் நல்வினை தீவினை என்னும் கயிற்றின்வழி ஆட்டிக்கொண் டிருக்கிருர். அவைகள் ஆடிக்கொண்டி ருக்கின்றன. பட்டினத் துச்சுவாமிகள் மிக அழகாகப்பாடுகிருர் கவனியுங்கள்.

ஊட்டுவிப்பானும் உறங்குவிப்பானும் இங்கொன்ருேடொன்றை
மூட்டுவிப்பானும் முயங்குவிப்பானும் முயன்றவினைக்
காட்டுவிப்பானும் இருவினைப்பாசக்கயிற்றின் வழி
ஆட்டுவிப்பானும் ஒருவனுண்டெதில்லையம் பலத்தே.

என்பதால் விளங்கும். பொம்மைக் கூத்துப்பார்த்தவர் களுக்கு நன்ருக விளங்கும். பொம்மைகள் ஆடவேண்டுமென் ருல் அத்தொழில் வல்லவன் அப்பொம்மைகளை கயிற்றிலே பிணித்து ஆட்டவேண்டும் அவன் அப்படி ஆட்டாவிட்டால் அப்பொம்மைகள் ஒரு செயலுமில்லாது சும்மாகிடக்கும் அதேபோலத்தான் பொம்மைகளாகிய நம்மை அறம்பாவம் என்னும் அருங்கயிற்ருல் கட்டி நாடகத்தலைவனுகிய சிவபெரு மான் ஆட்டுகிருர், நாம் ஆடுகிருேம் அறிவுவிளங்காத சிறு வர்கள் பொம்மை ஆடுவதைப்பார்த்து அவைகளை ஆட்டு பவன் உள்ளேயிருப்பது தெரியாமையால் பொம்மைகள் தானுகவே ஆடுகின்றன என்று எண்ணுவது போல உலகிலே

பலபேர் நமக்குள்ளே சிவபெருமான் இருந்து ஆட்டுகிருர் என்பதை உணராமல் நாமேயெல்லாக்காரியங்களையுஞ் செய்கிரோம் என்று எண்ணிவீணே கெடுகிருர்கள். சிவபெருமான் அருளே வடிவமான அம்பிகையை இடப்பாகத்திலே வைத்து யோக போக்கியங்களை அவள் மூலமாகத்தந்தருளுகிறார். அப்படியில்லாமல் அவளை தனக்குள்ளே கரந்து யோகமூர்த்தியாக எழுந்தருளிஞல் உயிர்கள்யோக நெறியிலே தலைப்படும். சங்காரகாலத்திலே உயிர்களின் வினைகளை ஒடுக்குதல் செய்தருளுவார். இப்படி அவர் போகியாயிருந்து போகத்தையும் யோகியாயிருந்து யோகமுத்தியையும் கோரமூர்த்தியாகிஇளைப் பாற்றலையும் விஷ்ணு முதலான எல்லாஉயிர்களுக்கும் கொடுத்தருளுகிருர். இவற்றை உணராத மூடர்கள் பலபேர் சிவபெருமானை பிறப்பு இறப்புக்களிலே மொத்துண்டலைகின்ற தேவர்களிலே ஒருவனுக எண்ணிக்கெடுகின்ருர்கள் என்று அருளுகின்ருர் அருணந்தி சிவாசாரியசுவாமிகள்

போகியாயிருந்துயிர்க்குப் போகத்தைப்புரிதலோனுர்
யோகியாயோகமுத்தியுதவுதலதுவுமோரார்
வேகியாஞற்போற் செய்தவினையினை வீட்டலோர்ரார்
ஊகியா மூடரெல்லாம் உம்பரிலொருவனெனபார்

அம்மையோடு எழுந்தருளாவிடில் உலகத்தில் ஒன்றுமில்லை என்றருளுகிறது. திருக்களிற்றுப்படியார்.

ஆகமங்களெங்கே அறுசமயந்தானெங்கே
போகங்களெங்கே மற்றைப்புணர்ப்பெங்கே-பாகத்
தருள் வடிவுந்தானுமாயாண்டிலனேலந்தப்
பெருவடிவை யாரறிவார் பேசு

பிரமவிஷ்னுவாதி தேவர்கள் முதலான தேவர்களும் மற்றையுயிர்களும் வாழ்கின்ற வாழ்வெல்லாம் சிவபெருமானேடு உறைகின்ற அம்மையாகிய சிவசத்தியினுல் வந்ததேயாம் சிவ ஞான சித்தியாரில் தெளிவாக கூறுகின்றது. படித்துப் பாருங்கள்

சத்தியுஞ் சிவமுமாயதன்மை யிவ்வுலகமெல்லாம்
ஒத்தொவ்வா ஆணும் பெண்ணும் உணர்குண குணியுமாகி
வைத்தனன் அவளால்வந்த ஆக்கம் இவ்வாழ்க்கையெல்லாம்
இத்தையுமறியார் பீடலிங்கத்தினியல்பு மோரார்

என்பதால் விளங்கும் மற்றைத் தேவர்கள் தனது மனைவிமார் களைப்பிரிந்து வருந்தித்திரிந்து பின்னே சிவபெருமானைப் பூசித்து மனைவிமுதலிய வாழ்க்கையைப் பெறுவார்கள். சிவ பெருமான் உயிர்களுக்கு அருள்புரியும் பொருட்டாக உமா தேவியைப்பிரியாது பாகத்திலே வைத்தருளுவார். வண்டார் குழுலரிவையொடும் பிரியாவகை பாகம் என்பார் சம்பந்த சுவாமிகள்

" ஏறுடையீசன் இப்புவனியையுய்யக்

கூறுடைமங்கையுந்தானும் வந்தருளி என்றருளுகிறார். மாணிக்கவாசக சுவாமிகள். சிவபெருமான் முன் பொரு காலம் சனகாதி முனிவர்களுக்கு ஞானயோகநிலையை உணர்த் தும் பொருட்டு கண நேரம் யோக நிலையிலிருந்தார். அந்த நேரம். திருமால முதலிய எல்லா உயிர்களுக்கும். பலயுகங் களாகி விட்டன. மன்மதனிருந்தும் யாரும் போகத்திலே நினைவில்லாமல் செயலில்லாமலிருத்தார்கள். சிவபெருமான் எங்நிலையிலே விளங்குகிறாரோ உயிர்களும் அந்நிலையிலே விளங்கும். இதனாலே அவனன்றி ஒரணுவும் அசையாது என்ற ஆப்த வாக்கியமெழுந்தது. கந்த புராணப்பாடலும் அருணைக் கலம்பகப் பாடலும் மிக அற்புதமாக விளக்கு கின்றன.

ஆரணன்றனது மைந்தர்க்கரும் பெறல் ஞானபோதம்
ஓரிறை காட்டு முன்னருலகெலாம் ஒருப்பாடொன்றி
ஈருடல் முயங்கும் ஆர்வம் இன்றியே இருந்தயார்க்கும்
காரணன் சிவனே என்கை கழறவும் வேண்டற்பாற்றோ
எல்லாவுயிர்க்கும் உயிரருணே சரென்பதி வரசையி
னல்லாதணுவு மசையாது என்பதறிந்தனமே
வில்லாடன் மாரனிருக்கவும் யோகம் விளைத்தவந்நாள்
புல்லாதிருந்தன எல்லாவுயிருந்தம் போகத்தையே

என்னும் அருமைப்பாடல்களை படித்து உணர்ந்தும் கொள்வது அறிவுடைப்பக்தர்களின். முக்கிய கடமையாகும். அப்படியல்லாமல் எல்லாத்தெய்வமும் ஒன்றுதான் என்று வாய்க்கு வந்தவாறு பிதற்றிக் கெடுவது. அறிவுடைமை யாகாது ஆகவே அருட்சத்தியாகிய உமாதேவியை இடப்பாகத்தில் வைத்திருக்கும் சிவபெருமானே எல்லாத் தேவர்களுக்கும் தலைவர் என்னும் அருமைக் கருத்தை = அன்னமென்னடை அரிவையொடினிதுறை அமரர்தம் பெருமானுர். என்று விளக்கியருள்கிறுர் ஞானசம்பந்த சுவாமிகள். இனி இரண்டாவது அடியின் பொருளைக் காண்போம். மின்னலைப் போன்று ஒளியும் செந்நிறமும் உடைய சடையிலே வெண்மையான எருக்கமலரைச் சூடியவர் = சிவபெருமானுடைய கருணையை எல்லாருக்கும் எளிதிலே விளக்குவது அவருடைய சடைமுடியேயாம்வேறு எந்தத் தேவர்களுக்கும் சடையைப் பற்றிய பேச்சே இருக்காது அவர்களுக்கு முடியிலே பொன்னுலும் ரத்தினத்தாலும் ஆக்கப்பட்ட கிரீடம் ஒன்றுதான் வைத்திருப்பார்கள். சிவபெருமானைப் பாடும் அடியார்கள். அவருடைய சடைமுடியைப் பற்றித்தான் சிறப்பாகப் பாடுவார்கள் ஏனெனில் உலகத்திலே எல்லோரும் வேண்டாது ஒதுக்கி மதியாத பொருள்கள் அவருடைய சடையிலே இருக்கிறது. இதனுலே அவர் கருணை மிகுந்த பித்தன் என்று அடியார்கள். பாடுவார்கள். சடையிலிருக்கும் பொருள்கள் தலைமண்டை பிரமனுடையது. பாம்பு தும்பை மலர் வெள்ளெருக்க மலர் கொன்றைமலர், ஊமத்தமலர்கங்கைசந்திரன் ஆகியவையாம் இங்ஙனே விரித்தால் மிகவிரியும் ஆதலால் வெள்ளெருக்கமலர் உலகினர் விரும்பாதது. ஆனுல் சிவபெருமானுடைய முடியிலே விளங்குவது. இழிந்தவர்களும் சிவபெருமானை அடைந்தால் உயர்ந்தவராவார்கள் என்பதாம் வெள்ளெருக்க மலரை காம்பு இதழ் இவைகளை நீக்கிவிட்டு பசும்பாலில்போட்டு

எடுத்துகோத்து சிவபெருமானுக்கு சாத்திப்பூசனை செய்தால் பாவமும் போகும் அன்பர்கள் பூசிப்பார்களாக இனி மூன்ருவது அடியின் பொருளைக்காண்போம். வேதத்திலே ரகசியமாகியிருக்கின்ற நற்பொருளை கண்ணுவராதி முனிவருக்கும் பிரமன் முதலாகிய தேவர்களுக்கும் கூறியருளியவர் என்பதாம் வேதப்பொருளை உள்ளபடி அறிவதே அறிவின் பயனுகும். வேதசிவாகமம் இரு பெரிய நூலும் சிவபெருமானுல் அருளிச்செய்யப்பட்டது. அவைகளின் பொருளாக விளங்குபவர் சிவபெருமான் அப்பெருமானுடைய புகழே வேதத்தில் ஒரு பாதியாகவும் மற்ற எல்லாத்தேவர்களுடைய புகழும் ஒரு பாதியிலே பேசப்படுகின்றன. கந்தபுராணங் கூறுகின்றது பிரமன் பேசுகின்ருன்.

நான்மறை தனிலோர்பாக நாரமார் கடவுட் சென்னி
மேன்மையதியம்பு மெம்மை விண்ணவர் தம்மையேனைப்
பான்மை கொள்பூதந்தன்னைப்பல் பொருடனையும் பாதி
தான் மொழிந்திடுமாலீது தவறலவுணர்தி தக்கோய்.

என்பதாலும் சிவாகமம் இருபத்தெட்டும் சிவன் பெருமையே கூறுவதாலும் சிவபெருமானே வேத சிவாகமத்தின் நற்பொருளாக விளங்குபவர் என்று நன்ருகத் தெளிந்து கொள்வது பிறவியின் பயனுகும் திருவிளையாடற் புரணத்திலே வேதத்துக்கு பொருளருளிச் செய்யப்பட்ட படலத்தையும் அன்பர்கள் படித்துணர்வார்களாக: இனி நான்காவது அடியின் பொருள் பெரிய மதில்கள் விளங்குகின்ற சிரபுரத்தில் வீற்றிருக்கின்ற அழகிய பொன்னையும் தாமரை மலரையும் போன்ற திருவடிகளையுடைய சிவபெருமானுடைய திருவடிகளை வணங்குகின்ற அடியவர்கள்

வினையோடு பொருந்தமாட்டார்கள் என்பதாம் அடியை வணங்கிப் போற்றுவதனுலே அடியார்கள் என்று பெயர் வந்தது நாள்தோறும் சிவபெருமானுடைய திருவடிகளை மலர்தூவி வணங்குகின்ற அடியார்களுக்கு ஆகாமியவினை ஏருது ஆகாமியம் இல்லாதுபோகவே சஞ்சிதமும் பிராரத்தமும் ஒழிந்துவிடும் இம்மூவினையும் அழியவே பிறவியொழிந்துபோகும் ஒளி இருக்குமிடத்திலே இருள் தலைகாட்டாதென்பது போல சிவபெருமானுடைய அடியை வணங்கு பவர்களுக்கு இருள்சேர் இருவினையும் சேராது இதனுல் சிவபெருமானே வினைக்கேடன் என்று பெயர் பெறுவார் திருவாசகத்தில் காண்க இவ்விரிவுரையினுல் சிவபெருமானே பரம் பொருளென்றும் அவருடைய அடிகளைத்தொழுதலே இன்பமுமாகுமென்று தெளிந்து கடைப் பிடித்துய்வோமாக.

(தொடரும்)

திருஞானசம்பந்தர் திருவடி வாழ்க



# சேக்கிழாரும் சேயிழையார்களும் 9

'சிவநெறித் தவமணி'
செல்வி : த. பத்மாவதி அவர்கள்,
மதுரை ஆதீன சிஷ்யை,
54, ஐடாமுனி கோவில் மேலச்சந்து, மதுரை.

## திருநீலகண்ட நாயனார் மனைவியார்

பெரிய புராணத்தில், பல இடங்களில் இல்லற வாழ்க்கையே பெரிதும் வற்புறுத்தப் பெற்றிருக்கிறது 'இல்லற மல்லது நல்லறமன்று'' என்ற ஔவையார் வாக்கிற்கு இணங்க, இயல்புக்கு மாறுத நிலையிலே இல்லறத்தில் நின்று, இறைவனிடத்தில், கணவன் மனைவி இருவரும் ஒத்த அன்புடையவராயிருந்து, இவ்வுலகில் பெறும் பேறுகள் மட்டுமன்றி அவ்வுலக வாழ்விலும் பெரும் பேறுபெற்றுத் திகழ்ந்து முடிவாம் முத்திப் பேறும் பெற்றிருக்கின்றனர்.

இவ்விதழில் இடம்பெறும் அம்மையார் இல்லற நெறி நின்ற தோடன்றிப் பெண்ணுரிமையையும் போற்றி ஒழுகியிருக்கிருர்.

சிதம்பரத்தில் வேட்கோவர் குலத்தில் திருநீலகண்டர் எனும் பெரும்பக்தர் வாழ்ந்து வந்தார். அவர் சிவ பக்தி, அடியார் பக்தியில் சிறந்தவர். மண்பாண்டங்கள் செய்து அவற்றை விற்று தன் வாழ்க்கைக்கு வழி செய்து கொண்ட

அவர், திருவோடுகள் செய்து அவற்றை அடியார்களுக்கு அளித்துத் தொண்டு செய்வதையும் தவறாமல் கடைப்பிடித்தார். எனவே நாமும் நமது அன்றாடத் தொழிலையே சிவத் தொண்டாகவும் செய்யப் பயின்றால் அது இவ்வுலகை விட்டு நீங்கும் பொழுது வழிப்பயணத்திற்குக் கட்டுச் சோறாக வந்து உதவும்.

திருநீல கண்டத்துக் குயவனார் என்று சுந்தரமூர்த்தி சுவாமிகளால் போற்றப் பெறும் இவர் தம் மனைவியார் அருந்ததிக் கற்பினும், இலக்குமியின், மிக்க அழகிலும் சிறந்தவர். பத்தினி, பத்தர்கள், தத்துவ ஞானிகள் என்று திருமூல தேவ நாயனாரால் சிறப்பிக்கப் பெறும் மூவருள் பத்தினியர் முதலிடம் பெறுவது அவர்தம் கற்பினாலேயே ஆம் என்பதை உணர்தல் வேண்டும்.

இவ்விருவரும், உலகத்தினை உய்விப்பான் வேண்டி, விடத்தைத் தன் கண்டத்தில் நிறுத்தி, நீல கண்டத்துடன் விளங்கும் சிவபெருமானது திருநீல கண்டத்தின் மீது அளவு கடந்த பக்தி செலுத்தி இல்வாழ்க்கையை நடத்தி வந்தனர்.

ஒரு நாள் திருநீலகண்டர் பரத்தை ஒருத்தியை அணைந்து வீடு திரும்பினர். பெரிய புராணத்தில் "இளமை மீதூர இன்பத்துறையினில் எளியர் ஆனார்" என்று திருநீலகண்டரின் உள்ளம் தவறிய செய்தியை சேக்கிழார் பெருமான் குறிப்பிடுகிறார். அவர் பரத்தையர் பால் அணைந்த விபரம் அவரது மனைவியாருக்கு தெரிந்தது அவள் என்ன செய்தாள்? அக்கம் பக்கத்து வீடுகளில் சென்று சொல்ல வில்லை. அயலார் அறியாமலும், முகத்தைத் தொங்கப் போட்டுக் கொண்டு இராமலும், இல்லறத்தின் கடமைகளை வழுவாமல், செய்தாள் இதனை மகளிர் கவனிக்க வேண்டும். அவளுக்கு அத்தகைய துணிவு வந்ததற்குக் காரணம், இறைவனிடத்தில் செலுத்திய

அன்பேயாம். ஆனால் பிற மாதரைத் தீண்டிய கணவரைத் தீண்ட அவள் மனம் இசையவில்லை. ''மனையின் வாழ்க்கை ஏனைய எல்லாம் செய்தே உடன் உறவு இசையாரனார்', என்பது சேக்கிழார் பாடல், அவளிடத்தில் திருநீலகண்டர் தன் பிழையைப் பொறுக்க வேண்டிய போது, அம்மையார் ஒன்றும் பேசாமல் இருந்தமையால் ஊடல் தீர்ந்தனள் என்று நினைத்து அணுகிய போது ''எம்மைத் தீண்டுவீராயின் திரு நீலகண்டம்'' என்றார்.

திரு நீல கண்டத்தின் மீது ஆணையிட்டுக் கூறியதைக் கேட்ட திருநீலகண்ட நாயனார், இன்பத்துறையில் வேகம் உடையவரேயாயினும், சிவபக்தித் திளைப்பாலும், திருநீல கண்டத்தின் மீது கொண்டுள்ள பலமடங்கு ஆறாக்காதலினா லும் தேவராலும், முனிவராலும் மற்றெவராலும் சாதிக்க முடியாத அரிய காரியத்தை சாதித்தார்.

''எம்மை என்றதனால் மற்றை மாதரார் தமையும் என்றன் மனத்தினும் தீண்டேன்'' என்றார். திருநீலகண்டர் வயதில் இளையவர், செல்வத்தில் எளியவர் ஆயினும் ''நாதனார் கழல்கள் வாழ்த்தி வழிபடும் நலத்தில் பெரியவர். எனவே திருவருள் பலத்தால், மனைவியைப்பார்த்து ''எம்மை என்ற மையால் உன்னையே யன்றிப் பிறமாதரார் எவரையும் மனத் தினும் தீண்டேன்'' என்று சூள் உரைத்தார். இருவரும் ஒருவருக்கொருவர் உபகாரமாக, ஒரே வீட்டில், அதிலும் சிறிய வீட்டில், அன்பு வளர்ந்தவர்களாய் அற்புறு புணர்ச்சி யின்மை அயலறியாமல் வாழ்ந்தனர். கணவனும் மனைவியும் ஒருவரை ஒருவர் மனத்தினும் தீண்டாமல் வாழ்ந்தனர் என் பது அக்கம் பக்கத்தினருக்கும் தெரிய வில்லையாம்.

இப்படிப் பல ஆண்டுகள் கழிந்தன வடிவுறு மூப்பு வந்த போதும், தளர்ச்சி அடைந்தபோதும், தம்பிரான் திறத்து அன்பு சாயாது வாழ்ந்தனர். இளமையில் அழகும், மூப்பில்

அழகின்மையுமே பொது விதி. ஆயினும் சேக்கிழார் பெருமான் வடிவுறு மூப்பு என்று கிளர்ச்சி செய்கிருர் நன்ருகப் பழுத்த பழங்கள், காயைவிட அழகாக இருப்பது போல் இறைவன் அன்பில் திளைத்துப் பழுத்த அடியார்கள் மூப்பிலும் அழகு பெறுகின்றனர் என்பதே சேக்கிழார் கருத்து

இவர்களது செயலை உலகிற்குணர்த்த விரும்பினுர் சிவ பெருமான். சிவத்தவயோகி போல் வேடம்பூண்டு கையில் திருவோடு ஏந்தித் திருநீலகண்டர் வீட்டினை அடைந்தார். அடைந்தவர் ஓட்டினைத் திருநீலகண்டரிடம் இதனைப் பாது காத்து நான் கேட்கும்பொழுது கொடு'' என்று கொடுத்தார். கொடுத்தவர்சும்மா கொடுத்தாரா? ''இவ்வோடு அரியது, விலையில்லாதது, இதில் இட்டனவற்றை யெல்லாம் தூய்மை செய்யவல்லது ஒப்பற்றது'' என்று அதன் பெருமையை விதந்து கொடுத்துச் சென்ருர். திரு நீலகண்டர் அதனைப் பெற்று ஓரிடத்தில் பாதுகாத்து வைத்திருந்தார். சிவபெருமான் அதனை அவ்விடத்தினின்றும் போக்கினுர். அவருடைய திருவிளையாடல் எதுதான் செய்யாது?

நாட்கள் பல சென்றன சிவபெருமான் பழைய தவ யோகி வடிவில் மீண்டும் வந்தார். முன்னர் தந்த அத்திரு வோட்டினைக் கேட்டார். திருநீல கண்டர் வைத்த இடத்தில் சென்று பார்த்தார். அங்கே இல்லை. தானும் மனைவியுமாக வீடு முழுவதும் தேடிவிட்டு ''ஐயனே, சிறியேன் செய்த பிழையைப் பொறுத்தருள வேண்டும். வைத்த இடத்தில் திருவோட்டினைக் காணவில்லை அதற்குப் பதிலாகப் புதிய நல்ல திருவோடு தருகிறேன்'' என்ருர் சிவத் தவயோகிக்குக் கோபம் பொங்கியது. ''காணவில்லை என்பதை நீயும்உன் மனைவியும் கையைப் பிடித்துக் கொண்டு குளத்தில் மூழ்கிச் சத்தியம் செய்து சொல்லு'' என்ருர்.

பாவம். அற்புறு புணர்ச்சியின்மை அயலறியாமல் வாழ்ந்த திரு நீலகண்டர் என் செய்வார்? ஒரு சபதத்தால் நான் அவ்வாறு செய்ய இயலாத நிலையில் இருக்கிறேன். நான் மட்டும் மூழ்கிச் சத்தியம் செய்கிறேன் என்றார் இதனை வந்தவர் ஒத்துக்கொள்வாரா? அவர்தான் திரு நீலகண்டரின் அரிய திறத்தை உலகறியச் செய்வதற்கென்றே வந்திருக்கிறாரே! வழக்கை முற்றச் செய்து, தில்லை வாழ் அந்தணர்தம் சபைக்குக்கொண்டு போனார் அவர்களிடத்தில் முறையிட்டார். அவர்களும் விசாரித்து, மனைவியுடன் மூழ்கிச் சத்தியம் செய்யும்படி தீர்ப்புச் சொல்லினர்.

அருந்தவம் செய்யும் தொண்டர், அதனைக் கேட்டுத் தன் மனைவியைத் தீண்டுவதில்லை. என்ற செய்தியைச் சொல்லவில்லை "பொருந்திய வகையில் நீரில்மூழ்கி உண்மையை உரைக்கிறேன்" என்று தன் மனைவியை அழைத்து வந்து, பெருந்தவ முனிவரோடு திருப்புலீச்சுவரத்திற்கு முன் உள்ள திருக்குளத்தில், சூளுரையும் பழுதாகாமல் ஒரு மூங்கில் தண்டின் ஒரு நுனியைத் தானும், மற்றொரு நுனியைத் தன் மனைவியும் பிடித்துக் கொண்டு மூழ்க முயன்றார். கரையில் நின்ற யோகியார் "மனைவியின் கரத்தைப் பற்றி மூழ்கித்தார் என்று கூவினார். அப்பொழுது தான், வேறு வழியின்றி அவ்வாறு கரம் பற்றி மூழ்காததற்குரிய காரணத்தை உலகர் அறியும் படி வகையாய் வெளிப்படச் சொல்லி மூங்கிற்றண்டின் நுனி பற்றி மூழ்கினர்.

> வாவியின் மூழ்கி ஏறும் கணவரும் மனைவியாரும்
> மேவிய முப்பு நீங்கி, விருப்புறும் இளமை பெற்றுத்
> தேவரும், முனிவர் தாமும் சிறப்பொடு பொழியும் தெய்வப்
> பூவின்மா மழையின் மீளமுழ்குவார் போன்று தோன்ற

அவர்கள் முன்னைய இளமை பெற்றுக் கரையேறினர். சிவபெருமான் ஆகாயத்தில் காட்சி கொடுத்து உங்கள் நிலை மையை உலகறியச் செய்தோம். இவ்விளமை நித்தியமாய் நீங்காது எம் உலகில் உறைவீர்களாக'' என்று அருள் செய்தார். அவ்வண்ணமே இருவரும் சிவலோகத்தில் என்றும் அகலாத இளமை பெற்றுப் பரமானந்தமுற்று இருக்கின்றனர். தனியடியார் அறுபத்து மூவருள், முதல்வர் திரு நீலகண்ட ரேயாவார். பட்டினத்து சுவாமிகள், பிள்ளைக்கறி படைத்த சிறுத்தொண்டரை 'வாளால் மகவரிந்து ஊட்ட வல்லவர் என்றும், மனைவியிடமே துறவுகாத்த திரு நீலகண்டரை, மாது சொன்ன ஆளால் இளமை துறக்க வல்லவர் என்றும், தன் கண்ணை எடுத்துச் சிவபெருமான் கண்ணில் அப்பிய கண்ணப்பரை, நாளாறில் கண்ணிடந்து அப்ப வல்லவர் என்றும் மூன்று நாயன்மார்களைப் போற்றிப் பாராட்டி யிருக்கிறார். அவர் மூவருள், நடு நாயகமாக அமைந்தவர் திரு நீலகண்டரே எனின் அவரது பெருமையை நம்மால் உணர இயலுமோ ? திருப்புலீச்சுவரக்கோயில் இன்னும் இளமை யாக்கியார் கோயில் என்று வழங்கப் பெறுகிறது.

திருவள்ளுவர், காமத்துப் பாலில்,

"துனியும் புலவியும்'' இல்லாயிற்காமம் கனியும் கருக்காயு மற்று'' என்று ஒரு குறள் அருளியிருக்கிறார்.

சிற்றூடல்கள் துனி என்றும், பேரூடல்கள் புலவி என்றும் பெயர் பெறும் இவ்விரு ஊடல்களும் இன்பத்தை மிகுவிக்கும் இயல்புடையன என்பது மேலுள்ள குறளின் பொருளாகும் ஆனால் அளவுக்கு மிஞ்சினால் அமிழ்தமும் நஞ்சல்லவா ?

இச்சரிதத்தில் புலவி சிறிது அளவு கடந்து போனமை யால் சரிதம் உருவாகவும், இறைவனது திருவருள் பலத்தால் அது பலிக்கவும் நேர்ந்தது.

நந்தி நாமம் நமச்சிவாய எனும்
சந்தையால் தமிழ் ஞானசம்பந்தன் சொல்
சிந்தையால் மகிழ்ந்து ஏத்தவல்லாறெல்லாம்
பந்த பாசம் அறுக்க வல்லார்களே. என்றார் ஞான
சம்பந்தப் பெருமான்

அதுபோல திருநீலகண்டம் என்ற இறைவனது திருநாமத்தில் திளைத்த திருநீலகண்டநாயனாரும் அவர் தம் மனைவியாரும் பந்த பாசம் அறுக்க வல்லவர் ஆயினர் தேவர்களும், முனிவர்களும் மற்றும் யாவரும் செய்தற்கரிய செயலை இவர்கள் செய்தமைக்குக் காரணம், யாவரும் செய்தற்கரிய செயலாகிய இறைவன் திருநாமத்தில் திளைத்த வல்லமையேயாம்.

அதனாலேயே ஞான சம்பந்தரும் மேற்சொன்ன தேவாரத்தில் ' சிந்தையால் மகிழ்ந்து ஏத்த வல்லாறெல்லாம்'' என்று அதன் அருமையை விளக்கினார்.

எனவே நாமும் இறைவன் அன்பில் மேலிடவும், அவரது நாமத்தை இயன்ற அளவில் உரு ஏத்தவும் முயன்று வெற்றி பெற்று உய்வோமாக.

( தொடரும் )

# விளக்கிட்டார் பேறு

இராம. கோபாலகிருஷ்ணன், எம். ஏ.,
விரிவுரையாளர்
பழனியாண்டவர் கல்லூரி, பழனி.

எல்லா விளக்கும் விளக்கல்ல சான்றோர்க்குப்
பொய்யா விளக்கே விளக்கு

—குறள்

உலகெலாம் உணர்ந்து ஓதற்கு அரியவனுன இறைவன். தளையில் கட்டுண்டிருக்கும் ஆன்மாக்களின் மேல் வைத்த கருணையினால் எண்ணிறந்த படிவங்களும், வடிவங்களும் கொண்டு ஒன்று, இரண்டு, மூன்று என்று எண்ணிக்கையில்லா நிலையில் நின்று அருள் புரிகின்றான். 'வானாகி, மண்ணாகி, வளியாகி, ஒளியாகி, ஊனாகி, உயிராகி, உண்மையுமாய், இன்மையுமாய் கோனாகி என்று எங்கும் வியாபித்து 'பார்க்கின்ற அண்ட பிண்டப்பரப்பனைத்தும் நின்செயலே யார்க்குஞ் செயலிலையே ஐயா பராபரமே' என்ற வாழ்த்துப் படி எல்லாமாய் இருப்பவன் இறைவன் எம்பெருமான் சிவபெருமான் விரும்பி கோயில் கொண்டுஎழுந்தருளிய ஐந்து முக்கிய தலங்களில் நெருப்புத் தலமாய் விளங்குவது திருவணாமலை. இங்குதான் 'அலரவனும்மாலவனும் அறியாமே அழலுருவாய் நிலமுதற் கீழண்டமுற நின்றார் கண் காட்டும் நுதலான். ஆதியும் அந்தமுமில்லா அரும்பெருஞ்சோதி, சொற்றுணை வேதியன் சோதி வானவன், ஒளியே ஒளியின் உணர்வே, ஒளிவளர் விளக்கே, சூழொளி விளக்கே தீபமங்

கள சோதிநமோ நம, கோடாத மணிவிளக்கே என்றெல் லாம் போற்றப்படுவதால் ஆன்மாக்களை ஆளும் ஆண்டவன் எல்லோரும் பார்க்கும் ஒளிவடிவானவன் என்பதும், அவ் வொளி வடிவை விளக்கின் மூலம்வெளிப்படுத்தி இருளினைப் போக்க விளக்கு பயன்படுமாறு போன்று ஆன்மாக்களின், ஆணவம், அறியாமை போன்ற இருளினை நீக்கி 'வெளியால்' அருளில் விரவும் அன்பர் தேகம் ஒளியாய்ப் பிறங்குவது என்பதும் முற்றிலும் உண்மையாகும்,

மலஞ்சோரும் ஒன்பது வாயிலைக்கொண்டமானிடர்கள் ஊனினை உருக்கி உள்ளொளியைப் பெருக்குவதற்காக ஆன் றோர்கள் இறைவனை ஒளிவடிவாகக் கொண்டு அவ்வொளி யை விளக்கின் மூலம் ஏற்படும் சோதியில் வழிபட்டு 'அருட்பெருஞ்சோதி தனிப்பெருங்கருணை' என்ற நிலையில் தெளிவு பெற்றனர், 'விளக்கிட்டார் பேறு சொல்லின் மெய்ந் நெறி ஞானமாகும் 'என்ற அப்பர் பெருமானின் சரியை வழி யான சீலத்தில் நின்று 'திங்கள் வெண் கொழுந்தணி சடை யரை விளக்கேற்றி வழிபட்டு உய்ந்தவர்கள் நமிநந்தியடிகளும், கலியநாயனுரும், கணம்புல்லநாயனுரும். எம்பெருமானுக்கு எண்ணில் தீபம் ஏற்றி மகிழ்ந்த நமிநந்தியடிகளை சமணர்கள் 'கையில் விளங்கு கனலுடையார் தமக்கு விளக்கு மிகை காணும் நெய்யில்லை' என்று கூறி நீரை முகந்தெரிக்கும் படி இகழ்ச்சியாகக் கூறினர். அவர்கள் கூற்றை மெய்யாக்கும் வண்ணம் பொய்கையிலிருந்து நீர் சுமந்து வந்து திரிமேல் வார்த்து நாடறிய திருவிளக்கு விடியுமளவும் நின்றெறிய நீரால் எரித்தார் நமிநந்தியடிகள் எனின் அவர்தம் விளக்கிட்ட பேறினையும், தொண்டினையும் என்னென்பது! 'மிக்கதிரு விளக்கிட்டார் விழுத்தொண்டு விளக்கிட்டார் என்று சேக்கி ழாரால் புகழப்பெறும் பேறு பெற்றவர் கலிய நாயனுர். திருக் கோயில் திருவிளக்குப்பணிக்குப் பொருள் கிடைக்காத போது

மனையாரை விற்கமுற்பட்டார். அப்படியும் பொருள் பெற இயலாமையால், ,,மணிவண்ணச் சுடர்விளக்கு மாளில்யான் மாள்வன்,, எனத்துணிவுள்ளங்கொண்டு எண்ணெய்க்கீடாக உடல் உதிரங்கொண்டு நிறைக்கும் நோக்குடன் தன் மிடறரிய இறைவனே நேரில் தோன்றி கருணையுடன் கையைப் பிடித்துத்தடுத்து அருள் புரிந்தார்.

'மெய்ப்பொருளாவன ஈசர்கழல், எனும்விருப்புடையரான கணம்புல்ல நாயனர், 'தாவாத பெருஞ்செல்வம் தலைநின்ற பயன் இது என்று ஒவாவ ஒளிவிளக்குச் சிவன் கோயில் உள்ளெரித்து மகிழ்வார். கணம்புல்லை விலைக்குக்கொடுத்து அதன்மூலம் நெய் வாங்கி விளக்கெரிப்பது அவரது திருத்தொண்டு. ஓருசமயம் புல் எவ்விடத்தும் விலை போகா தொழியவும், கொண்டகொள்கையில் மாறுபடாமல் நின்ற நாயனர் தம் திருமுடியை மெய்யான அன்புடன் என்புருக மடுத்தெரித்தார். இருவினையின் தொடக்கெரித்தார். இவ்வாறுக இறைவனுக்கு விளக்கேற்றி வழிபட்டுய்ந்த திருத்தொண்டினைச் சேக்கிழார் திறம்பட இயம்புகின்ருர்.

அப்பர் பெருமான் இறைவனை 'சோதியாய்ச்சுடருமானர் என்று குறிப்பிடுகின்ருர். இராமலிங்கசுவாமிகள் மன்றில் நடம்புரியும் தெய்வநடத்தரசை, 'அருள்விளக்கே, அருட்சுடரே அருட்சோதி சிவமே என்று விளித்து சிவம்விளக்கின் சுடராகவும், சோதியாகவும்நின்று அருட்கதிர்களை வீசும் என்று நயம்பட உரைக்கின்ருர். மேலும்,

அருளாளர் வருகின்ற தருணமிது தோழி
ஆயிரமா யிரங்கோடி அணிவிளக்கேற் றிடுக
தெருளாய பசுநெய்யே விடுகமற்றை நெய்யேல்
திருமேனிக் கொருமாசு செய்தாலும் செய்யும்
இருளேது காலைவிளக் கேற்றிடவேண் டுவதோ
என்னுதே மங்கலமா போற்றுதலாங் கண்டாய்
மருளேலங் கவர்மேனி விளக்கமதெண் கடந்த
மதிகதிர்செங் கனல்விரவி என்னிலுஞ் சாலாவே

என்ற திருப்பாடலில் அவர் அருளாளர்களை வரவேற்று மங்கலம் பெற விளக்கேற்ற வேண்டும் என வலியுறுத்துகின்ருர். திரு ஞானசம்பந்தர், பூம்பாவையை விளித்து பாடும் திருமயிலைப்பதிகத்தில், 'துளக்கில் கபாலீச்சரத்தான் தொல் கார்த்திகை நாள் விளக்கீடு காணுதே போதியோ பூம்பாவாய்' எனப்பாடுவதிலிருந்து கார்த்திகை தீப விழாவன்று சோதி வடிவாகிய தோடுடைய செவியனை விளக்கிட்டு வணங்கினர் என்பது விளங்குகின்றது இறைவனின் திருப்பெயரும், அப்பெயரை உச்சரித்தால் இருள் கெடும் என்ற பொருள் பட 'இல்லக விளக்கது இருள் கெடுப்பது ......... நல்லக விளக்கது நமச்சயவே' என்று நாவுக்கரசர் விளக்குகின்ருர்.

திருவருளால் ஆருயிர் அறிவொளியாய் உள்ளத்தின் கண் விளங்குவது. அதனுல் அவ்வொளியினை உடல் உறுப்பு முதலிய தத்துவக் கூட்டங்களின் வேறு எனப்பிரித்துக் காட்டுவதும் காண்பதும் அறிவாகும். பிரித்துக் கண்டபின் உள்ளத்துள்ளே சிவ விளக்கினை ஏற்றவேண்டும். சிவ விளக்கினை ஏற்றுவதென்பது அச்சிவனை மறவாது நினைப்பதேயாகும் பாடத்தை வரப்படுத்துவதென்பது இதற்கு ஒப்பாகும். அச்சிவ விளக்கினுள் ஆருயிர் விளக்கு ஒட்டியுறுமாறு தூண்ட வேண்டும். அதாவது இடைவிடாது அன்பு பூணல் வேண்டும். திருவடியுணர்வாம் விளக்கினர் ஆருயிரின் அறிவு விளக்கை விளங்குமாறு செய்யும் பெருங்காதலாம் பத்தி வல்லார்க்கு அனைத்தையும் ஒருங்கு விளக்கும் சிவபெருமான் திருவடியினைப் பொருத்திப் பேரின்பப்பெருவாழ்வு எய்துதலும் உண்டு இக்கருத்தினை திருமூலர் ஞானுதேயத்தில் அழகு தமிழில் சுவைபட வெளிப்படுத்துகின்ருர்.

"விளக்கைப் பிளந்து விளக்கினை யேற்றி
விளக்கினுக் குள்ளே விளக்கினைத் தூண்டி
விளக்கில் விளக்கை விளக்கவல் லார்க்கு
விளக்குடை யான்கழல் மேவலு மாமே,"

—:o:—

# 'விதியை வெல்வோம்'

திரு. K. M. ஜெயராமகிருஷ்ணன்,
ஆசிரியர், 18 கிழக்குத் தெரு, குமரலிங்கம்.
உடுமலைத்தாலூகா, கோவை ஜில்லா.

எதற்கெடுத்தாலும் 'விதி' என்று பெயரிட்டு நாம் ஒவ்வொரு செயலாகத் தள்ளிப் போட்டு வருகிறோம்

உண்மையில் விதி என்ற ஒன்று உண்டா? இது பகுத்தறிவாளர் கேட்க வேண்டிய வினா. உனக்கும், எனக்கும் ஏன் இந்த வம்பு என்று சமாதானம் கூறுவர் நடுவு நிலைமையாளர்கள். உண்மையிலேயே விதி என்ற ஒன்று இருந்தால்—அதற்கு நிறம் என்ன? உருவ அமைப்பு யாது 'அன்று எழுதியவன் அழித்து எழுதமாட்டான்' என்று சொன்னால் அதை எழுதியவன் யார்?

'விதி' மனிதன் அமைத்தது தானே! இதை யாரும் எண்ணவில்லை எண்ண முற்படுவதும் இல்லை. இந்த இடை கூறான 'விதி' நாம் படைத்தது. ஆனால் இறைவன் படைத்ததோ 'மதி' எனப்படும். உலகம் முழுமையும் சர்வ வியாபியாய் விரவி நிற்கும் பெரும் பொருள் ஆகிய இறைவன் நமக்கு அளித்த வரமே 'அறிவு' இந்த அறிவை நாம் சரிவர இயக்காமல்கண்ட வழிகளில் செலவிட்டு பின் விளைவை 'விதி' என மாற்றி அமைத்து அதற்கு மெருகிட்டு — உருவிட்டு நம் மனத்திருத்தி வணங்குகிறோம்—வழிபடுகிறோம்!

இவ்வுலகில் தோன்றிய அனைத்துமே அழியும் தன்மை யுடையன என்பதை நாம் ஓரளவு உணர்வோம் — அப்படி யெனில் இவ்விதி மட்டும் விலக்கா? விதி என்ற அந்த மாயப் பேரரக்கனுக்கு ' அழிவு ' இல்லையா ? இதனின் பெரிய சக்தி தோன்றவில்லையா ? நாமே சற்று எண்ணுவோம்.

செடி முளைப்பதும், மரமாவதும், காய் காய்ப்பதும், பழ மாவதும் இறைவன் செயலே அன்றி, விதியின் செயல் அல்ல. அம்மரம் இடையில் வெட்டப் பட்டாலோ, அல்லது பட்டுப் போனாலோ அதற்கு இயற்கையாக அல்லது செயற்கையாக ஏதேனும் ஒரு காரணம் இருக்கும். அதாவது, ஒன்று பூச்சி அரித்திருக்கலாம் அல்லது போதிய நீர் இல்லாமல் இருக்கலாம் அல்லது அம்மரத்தை யாராவது வெட்டியிருக்கலாம், அவ் வாறன்றி ' விதி முடிந்தது — அது பட்டுப் போயிற்று' என்று கூறுவது எவ்வளவு விந்தை ?

' கடமையைச் செய் — பலனை எதிர்பாராதே ' என்ற ஸ்ரீ கிருஷ்ண பரமாத்மாவின் சொல்படி கடமையைச் செய் தால் பலன் நல்லபடியாக அமையும். அதை நல்லபடியாக இறைவன் நமக்கு வழங்குகிறார். அப்படியிருக்க, கடமையும் பலனும் இருபுறமும் நன்கு அமைந்திருக்க அதனூடே ' விதி ' என்னும் வேண்டாத ஓர் சொல்லைப் பயன்படுத்துவானேன். என்ன ஆச்சரியம் ! கொடுப்பவன் ஒருவன் இருக்க பெறு பவன் ஒருவன் இருக்க இடைநிற்கும் ' தரகனுக்கல்லவா ' போய்ச் சேருகிறது புகழும். சிறப்பும். அந்தோ கொடுமை ! இனியும் உறங்க வேண்டா — விழித்தெழு என்ற விவேகானந்தரின் வீர ஒலியை செவி மடுப்போம். சத்தியம், தர்மம் என்ற கவசங்களை அணிந்து வாழ்வு எனும் போராட்டத் தில் இறங்குவோம் ' சத்தியமே வெல்லும் ' என்ற ஆழ்ந்த கருத்தின் அடிப்படையில் செயல் படுவோம்.

' விதியை வெல்வோம் !'

'தோன்றின் புகழோடு தோன்றுக — அஃதிலார்

தோன்றலின் தோன்ருன்மை நன்று' என்ற பொய்யா மொழிக்கிணங்க — நாம் இப்பூவுலகில் பிறப்பெடுத்ததன் பயனை நிறைவு செய்வோம்! இறைவன் படைத்த இவ்வுடலில் கலந்து நிற்கும் 'தெய்வீக ஒளியான' உயிர் உடலை விட்டு அகலும் வரை — நாம் ஏதேனும் ஒரு நற்பணியாவது செய்ய வேண்டும் இது நம் கடமை இதனையே! ஒன்றே செயினும் நன்றே செய்க, அதுவும் இன்றே செய்க' என்றனர் ஆன்ருேர்.

பிறர்க்குத்தீமை தராத நன்மைதரும் செயல் அனைத்துமே நல்ல செயல்களாக கொள்ளப்படும். வள்ளுவர் கூறுமிடத்து,

'பொய்மையும் வாய்மையிடத்த புரைதீர்ந்த
நன்மை பயக்கு மெனில்'

என்று அதாவது. பொய்யான சொற்கள் கூட நன்மை பயக்கும் நல்லகாரியமாகப் பயன்பட்டால் அதுவும் வாய்மையாகக் கொள்ளப் படுவது போல, ஒரு சிலரின் துன்பத்திற்கு அஞ்சி உலகம் தழைக்கப் புரியும் நல்ல சேவை தீங்கு ஆகாது.

நன்மையான செயல்கள் எவை, தீமை எவை என்பனவற்றைப் பகுத்தறியவே இறைவன் நமக்கு பகுத்தறிவை தந்திருக்கிருன். பின் ஏன் நாம் தயங்க வேண்டும். 'விதி' என்னும் வீண் சொல்லைத் தவிர்ப்போம். செயல் புரிவோம். உலகில் விருப்பும், வெறுப்பும் அற்ற நிலையில் நாம் கடமையைச் செய்வோம் — அதுவே நமக்கு உற்ற துணையாகும்.

'செய்யும் செயல்களை விளம்பரத்திற்காகச் செய்யாமல் தெய்வ திருப்பணியாக நாம் கொள்வோமேயானுல் நமது மனதும் நிறைவு பெறும், அதன் பயனையும் பெறுவோம்'

என்கிறது கீதை இந்த அருமையான கருத்தின் சாரத்தையே கீதை முழுவதும் பரக்கக் காண்கிறோம்.

'செய்கைகள் அனைத்தையும் பிரம்மத்திடம்ஒப்படைத்து விட்டு எவ்விதப் பற்றும் கொள்ளாமல் எவனொருவன்தொழில் புரிகிறானோ அவனைப் பாபம் தீண்டுவதில்லை'.

'சமநோக்கு உடையவர்கள் இவ்வுலகிலேயே இயற்கையை வென்றவர்கள். பிரம்மம் மாசற்றது. சமநிலையுள்ளது. ஆகவே அவர்கள் வெகு எளிதில் பிரம்மத்தின் நிலை பெறுகிறார்கள்' என்கிறார் ஸ்ரீ கிருஷ்ண பகவான்.

இவ்வாக்கியங்களின் சாரத்தை நோக்குமிடத்து, அனைத்து உயிர்களிலும் ஆண்டவனை காண்பவனே உயர்ந்த நிலை பெறுவான் என்பதை நாம் உணர்கிறோம்.

'சர்வம் விஷ்ணுமயம்' என்றபடி அனைத்து ஜீவராசிகளிலும் இறைவனைக் கண்டால் அவற்றில் வேறுபாடு தோன்றாதல்லவா! மேலும், 'நான்' என்ற ஆணவம் அழிந்து ஞானம் பிறக்கவும் வழி ஏற்படுகின்றதன்றோ!

இதனை எளிய முறையில் அடையவே 'திருமூலர்' கூறுவார் :—

யாவர்க்குமாம் இறைவர்க் கொரு பச்சிலை,
யாவர்க்குமாம் பசுவுக்கு ஒரு வாயுறை,
யாவர்க்குமாம் உண்ணும் போது ஒரு கைப்பிடி,
யாவர்க்குமாம் பிறர்க்கு இன்னுரை தானே!

எனவே இறைவனை வழிபட பச்சிலை ஒன்றே போதும். அதுபோல பசுவுக்கு நம்மால் இயன்ற அளவு அதாவது ஒரு கைப்பிடியளவாவது புல் கொடுத்தால்-அதுவே சிறந்த சேவை என்கிறார். மேலும், உண்ணும்போது ஒரு கைப்பிடி உணவை யாருக்கேனும் தர்மம் செய்த பின்பே உணவருந்த வேண்டும்

என்கிருர். இத்தகைய நல்ல செயல்களை கடைப்பிடித்து வந்தால் நம்மால் இயன்ற சேவையை நாம் செய்துவிட்ட ஓர் நிறைவு ஏற்படுகிறதல்லவா !

இந்த நிறைவையே 'பூர்ணத்துவம்' என்பர். இந்நிலை பெற்ற மனிதனே -புகழ் உடம்பு பெற்றவனுவான். இவனே 'தோன்றிற் புகழொடு தோன்றுக' என்ற குறட்பாவுக்கு இலக்கணமாக அமைகின்ருர். அவனிடம் விருப்போ, வெறுப்போ இல்லை. அவனது அறிவு ஆழமானது – பரந்தது எவ்வாறு ஆழமான கடலில் அலைகள் எழும்புவதில்லையோ அதுபோல அவன் மனதும் - ஆழ்ந்த கடலைப் போல அமைதி பெறுகின்றது அவன் தன் செயல், சொல் இவையனைத்தையும் தெய்வத்துக்கு அர்ப்பணித்து விடுவதால் இவனை உலகில் தோன்றும் ஆசா, பாசங்கள் ஒன்றும் செய்வதில்லை. இந்த இடத்தில் 'விதி' என்ற சொல்லுக்கே இடமில்லை. விதி அழிந்து விடுகிறது. மதி தன் சிறப்பாற்றல் பெற்று ஞானச் சுடராகி அவன் மாட்டு கலந்து அதனுள் எழும் பிரகாசமானது எண் திசையிலும் வீசி, அவனைச் சார்ந்தோரையும் ஒளி பெறச் செய்கிறது.

எனவே, நாமும் அந்நிலை பெற, கீதை காட்டும் வழியில் - சேவை - எனும் பெரிய சிறந்த அறவேள்வி புரிந்து, அவ்வேள்வித் தீயில் விதியினை இட்டு தீய்த்து, மாய்த்து மதியினை வளர்த்து நம் கடமைகளைச் செய்து 'விதியினை வென்று' விழிப்படைவோமாக!

# இது சரியா?

ப. உமாதேவி பத்மநாபன்,
9/37 திரௌபதிஅம்மன் கோவில் தெரு
அரியாங்குப்பம் — புதுவை — 7
605007

தலைவியின் சொற்களால் சிந்தனை வயப்படும் தோழி குரவைக் கூத்தாடுவதோ, வேலன் வந்து வெறியாடுவதோ தக்க பலனைத் தராது என்பதையும் அறிகின்றாள். தலைவியின் பால் இரக்கப் படும் அவள், தக்க வழியொன்று கண்டு பிடிக்கின்றாள் நங்கையயே நீ சற்றேனும் குறைபடாதே ! வேலன் வந்து வெறியாடலை நிகழ்த்தினால் நிகழ்த்தட்டுமே ! அவன் மேல் வேலன் வந்து சந்நதங் கொள்ளுவானேயாயின் அதுவும் நடைபெறட்டுமே ! அதனால் எந்த இடையூறும் ஏற்படாது என்று சொல்லிக் கொண்டு போனவள் தலைவியின் பார்வையைக் கண்டு சற்று நிறுத்துகிறாள். இவளுக்கு பைத்தியமோ? எது நடந்தாலும் நடக்கட்டும் என்கிறாளே, நம் காதல் அம்பலமானால் எவ்வளவு தொல்லை ஏற்படும். அதனை உணராமல் உளறுகிறாளே என்ற எண்ணங்கள் அவள் பார்வையில் படிந்து நிற்பதை அறிவுடைத் தோழி உணர்ந்து கொள்கிறாள் ஆகவே, அவசரப்படாமல் சற்று நிதானமாகக் கேள் ! என்றவள் தொடர்ந்து, வெறியாடும் வேளையிலே, சிறந்த அணிகலன்களை பூண்ட நேரிழையோடு, ஆலமரத்தடியில் அமர்ந்து கனகாதி முனிவர்க்கு அருள் செய்த சிவபெருமானின் புதல்வனான முருகன் வருவான். வந்தால், உன்மனங் கவர்ந்தவனாகிய, பெருமலைக்குத் தலைவனுடன் மணவணி நிகழ நாம் அவனிடம் வேண்டுவோம்.

வேலனுர் வந்து வெறியாடும் வெங்களத்து
நீலப்பறவை மேல் நேரிழை தன்னெடும்
ஆலமர் செல்வன் புதல்வன் வரும் ; வந்தால்
மால்வரை வெற்பன மணவணி வேண்டுதுமே !

என்று கூறுகின்றுள் மயில் பலவண்ண இறகுகளை உடையது அதனைப்பற்றி அருணகிரியார் கூறும் போது.

**" உதய ரவி வர்க்க நிகர் வனகிரண விர்த்தவிதம்**
**உடைய சத பத்ரநவ பீடத்து வாழ்பவனும் "**
**( வேடிச்சி காவலன் வகுப்பு )**
**" பல நிற மிடைந்த விழுசிறை யலர்ந்த பருமயில் "**
**" சித்ர குல கலப வாசி "**
**" ரத்ன ரேகை ஒக்கச் சிறக்கு மாமயில் "**

என்றெல்லாம் குறிப்பிடுகின்றுர். இவளோ அதனை நீலப் பறவையென்று கூறுகின்றுள்

தோழி சொல்வதைக் கேட்கும் தலைவியின் உள்ளம் சற்று அமைதி கண்டாலும் வேறு ஒரு ஐயம் மனதுள் எழுகின்றது ஏனடி தோழி அப்படியே நாம் வேண்டிக் கொண்டாலும், அதற்கு அவன் அருள் செய்தாலும், பொருள் வயிற் பிரிந்த காதலர் வரும் வரை நம் பெற்றேர் சும்மா இருக்க வேண்டுமே. பொருள் தேடிப் பிரிந்த தலைவனுக்காகக் காத்திருப்பதை அறியாமல் மகட்கொடை கேட்டு ஊரவர் வந்தால் என்ன செய்வது? நம் பெற்றேர் நொதுமலர் வரவை ஏற்றுல் நம் பாடு திண்டாட்டம் ஆகி விடுமே ? அதை நீ ஏன் சிந்திக்கவில்லை என்று கேட்கின்றுள். ஏனெனில் தலைவியை மணந்து இன்பமாக வாழ விரும்பும் தலைவன் தேவையான பொருள் தேட, தன் ஆற்றலுக்கும், அறிவுக்கும் தக்கதோர் அலுவலை நாடி வேறு ஒரு நாட்டிற்குச் சென்றுள்ளான். இந்த நிலையில், தலைவியைப் பெண் கேட்டு அயலவர் வரின் இடர்ப்பாடு ஏற்படும் தலைவியின் பெற்றேர் அவள் மனங்

கவர்ந்தவனை ஏற்காமல் வேறிடத்தில் மணம் செய்விக்க முனைந்தால் அதனால் அவளின் கற்புக்கு ஏதம் உண்டாகும். அவ்வாறின்றி தலைவனுடன் "உடன் போக்கு" சென்று விட நினைத்தாலோ தலைவன் அயல் நாட்டில் இருக்கிறான். போக்கு வரவு வசதிகளற்ற நிலையில் இங்கு நடைபெறுபவை களை அவனுக்குச் சொல்லியனுப்ப முடியாது. அப்படியே முயன்றாலும், அவன் அறிந்து வருவதற்கு முன் காலம் கடந்து விடும். ஆகவே தான் அவள் மனம் கவல்கின்றாள் அதனைத் தோழிக்கும் உரைக்கின்றாள். தோழியோவெனில் அவள் வினவுக்குத் தக்க விடையை நாவின் நுனியிலேயே வைத்து இருப்பதால் உடனே விடை தருகின்றாள்.

தலைவியே! நின்னுடைய அச்சமும் நியாயமானதே! அதைப் போக்கவும் வழியுள்ளது. நீலப்பறவை மேல் நேரிழை தன்னோடு வந்தவனிடம், வெறும் மணவணி மட்டும் கேட்ப தோடு நின்று விடலாம் என்று எண்ணுகின்றாயா? அதையும் வேண்டுவோம். அதனோடு "கயிலையாகிய நன்மலைக்குத் தலை வனாகிய சிவபெருமானின் மகனே! நினக்குரிய, மயிலின் சாய லும், மடப்பமும் பொருந்திய எம்மலையவர் மகளான வள்ளி யம்மையின் அசோகந் தளிர் போன்ற திருவடிகளைத் தொழு தோம். அயலிலே, எம் சுற்றத்தார் மண ஏற்பாடுகள் செய் கின்றனர். அவற்றை ஒழித்து விட்டு எம் காதலருடன் மணம் புனையுமாறு அருள்தருவாய்.

கயிலை நன் மலையிறை மகனை! நின் மதி நுதல்
மயிலியல் மடவரல் மலையர் தம் மகளார்
செயலைய மலர்புரை திருவடி தொழுதேம்
அயல் மணம் ஒழியருள் அவர்மணம் எனவே!

என்று இறைஞ்சுவோம். என்று கூறியவள் தலைவியின் முகத்தை நோக்குகின்றாள். இத்தனை சொல்லியும் அவள் முகத்தில் ஒரு தெளிவும் இல்லை. இன்னும் என்ன குழப்பம்?

என்று யோசிக்கின்ருள். பின்னர் தொடர்ந்து, அதுமட்டு மல்ல அயலவர் மணத்தை ஒழித்து விட்டால் மட்டும் போதுமா? உன்னுடைய திருமணம் சிறப்புற நடக்க வேண்டுமல்லவா? தலைவனுடன் உடன் போக்குச் செல்வதி லோ, அவனுடைய ஊரில், நாங்கள் யாரும் கலந்து கொள்ளா மல். ஊரார் அறியாமல், உற்ருர், உறவினர் வராமல் நின்னு டைய மனம் நிகழ்வதில் என்ன சிறப்பு இருக்கப் போகிறது? உனக்குத் தான் என்ன பெருமை கிடைக்கப் போகிறது. ஆகவே இவற்ரேடு, உன்னுடைய திருமணம் உற்ருர் உற வினர் சூழ்ந்து நிற்க, பலரறிய நிகழும் மணமாக இருக்க வேண்டும் என்றும் வேண்டுவோம்.

மலைமகள் மகனே ! நின் மதிநுதல் மடவரல்
குலமலை உறைதரு குறவர் தம் மகளார்
நிலையுயர் கடவுள் ! நின் இணையடி தொழுதேம்
பலரறி மணமவர் படுகுவர் எனவே !

என்று கூறும் தோழியின் கூற்ருல் தலைவியின் மனம் மகிழ் கின்றது. அவளுடைய குழப்பத்துக்கெல்லாம் முடிவு கட்டிய தால் முகம் தெளிவடைகின்றது. என்ருலும் அடுத்தநொடியே அவள் வாடுகின்றது அவள் தோழியிடம், அச்சம் கிளர்ந் தெழும் குரலில், ''ஏனடி தோழி நம்மை விட உயர்ந்தவர்களைப் பரிகசித்தல் தகாதுஎன்பர். அவ்வாறிருக்க எல்லா உயிர்களுக் கும் உயிரானவனை அண்டசராசரமும் கை கூப்பித்தொழுது வணங்கும், உயர்வுடையவனை, தேவர்களுக்கும், மூவர் களுக்கும் உயர்ந்தவனை நம்குலக்கடவுளை கேலி செய்தேனே! மட்டிலா அழகும் அறிவும், அருளும், ஆற்றலும் கொண்ட வனை. மடையன் என்றெல்லாம் வசை பாடினேனே! அதற்காக அவன் என்பால் சினம் கொண்டிருப்பானேயாயின் என்ன செய்வது.அவ்வாறு அவன் முனிவு கொண்டிருப்பானேயாயின் என் வேண்டுதலை ஏற்கமாட்டானே! எனக்கு அருள் செய்ய மனமிரங்கமாட்டானே!எத்தனை பெரிய தவறு செய்து விட்டேன்? என்று புலம்பி மனங்கலங்குகின்ருள்.

உ

சென்னை மகா மகோபாத்தியாய

டாக்டர் உ. வே. சாமிநாத ஐயரவர்கள்,

தமிழ் அன்னைக்குச் செய்த சீரிய சேவையை உளம் கனிந்து பாடிய கவிதைகள்.

தா. மு. சுப்பிரமணியன்,
86, நாட்டுச் சுப்பராய முதலி தெரு,
மயிலாப்பூர், சென்னை.

# முற்றும்மை எச்சமாகும்!

ஊரூராய்த் தெருத்தெருவாய் வீடு தோறும்
ஓடியோடி நடைநடந்து கதவைத் தட்டி
யார்யாராய் இருந்தாலும் வணக்கம் சொல்லி
யானெனதை நீக்கியவர் தலையைத் தாழ்த்தி
கூர்நுனியாய்ப் பூவிரிக்கும் வாழை போல
கொடியபசி யாளன்போல் குழைந்து நின்று
யாரையா என்றகுரல் ஏச்சைப் பேச்சை
யாப்படங்கும் பாட்டாக எண்ணிக் கொண்டு (1)

ஏடிருந்தால் கொடுத்திடுக என்று வேண்ட
இதற்குத்தான் வந்தீரோ இல்லை என்பார்
ஓடிருந்தும் தேரைபாய் உள்ளத் தார்கள்
ஒல்லாத சொல்பொறுத்துப் பரணி மீது
தேடிநான் பார்த்திடவே அன்பு கூர்ந்து
திருவுள்ளம் இரங்கிடுக என்ற தேவை
தேடிநான் பார்த்திட்டேன் திக்கில் எங்கும்
தீந்தமிழே தமிழ்ச்சாமி நாத தேவே (2)

கைநொறுங்கும் அப்பளம்போல் நைந்த ஏட்டை
கைநடுங்கக் குழந்தைதனை ஏந்தும் தாயாய்
கைநொறுங்கும் மண்கட்டித் தூவல் போலக்
கரையானின் தூசியெலாம் மேனி பூச
கைநொறுங்கிப் போமளவும் ஏடு பார்த்த
கைகளை நான் தேடுகின்றேன் எங்கும் காணேன்
கைநொறுங்கிப் போமளவும் எழுதிச் சாவேன்
கைம்மாறு வேறில்லை சாமி நாத! (3)

செல்லதுவும் கரையானும் சேர்ந்து காதல்
செய்ததினல் விளைந்திட்ட ஏட்டுத் தீவில்
சொல்லதுவும் உரையதுவும் சொந்தங் கொண்டு
சொல்லொன்றாய்ப்பொருளொன்றாய்ச்சூழ்ந்தேவாழ
செல்லதுவாய் கரையானாய் ஏட்டைச் சேர்ந்து
செய்முதலை நெல்வட்டி கண்ட தேவை
சொல்லெதுவோ வாழ்த்துதற்கு மொழிகள் உண்டோ
சுடர்நிலாவான் தாய்மழைக்கு நன்றி இல்லை (4)

நெல்மணியைத் தந்துவிட்டால் பவள மூக்கால்
நீட்டோலை புரட்டுகின்ற கிளிகள் போல
பல்மணிகள் ஊடுபுக நூலைக் கொண்டு
பதக்கங்கள் செய்கின்ற ஊசி போல
சொல்மணிகள் காவியங்கள் தமிழில் வாழ
சொந்த நலம் பேணியுமே சொத்தைச் சேராச்
சொல்மணியே தமிழ்ச்சொத்தே ! தமிழின் சொத்தைச்
சொக்கவைத்த சாமிநாத நன்றி இல்லை (5)

பாட்டெழுதிப் பார்த்தாலும் பன்னிப் பன்னி
பலவாறாய் உரைகூறிப் பார்த்த போதும்
பாட்டுக்குள் அடிக்குள்ளே சீருக் குள்ளே
பதிப்பித்த நூலடங்கும் பட்ட பாடு
பாட்டுக்குள் அடிக்குள்ளே சீருக் குள்ளே
பதுங்கிடுமா பகலவனும் பதுங்கு வானா
பாட்டுக்குள் வெண்பாவே தமிழின் பாவைப்
படியெடுத்த கைகளுக்கு நன்றி இல்லை (6)

மீண்டுவரு பசிதாகம் போல வானில்
　　மீளவரும் கதிர்நிலாவான் மீன்கள் போல
மீண்டுவரு கடலலைகள் தென்றல் போல
　　மீளவருங் காமம்போல் நினைவைப் போல
மூண்டுவரும் சொற்களிருல் முற்றும் உம்மை
　　முழுதாக்க முடியவிலை தோல்வி கண்டேன்
மூண்டுவரும் முற்றும்மை எச்ச மாகும்
　　முரண்பாட்டை உவேசா கற்றுத் தந்தார் (7)

'கார் முகில்

---

சிவமயம்

திருச்சிற்றம்பலம்

# அத்வைத சித்தாந்த சபை

## இந்திரபீடம். ஆ. த. சச்சிதானந்தம்,

வேதாந்த போதகர்,

20, கிமிந்தக்கார ஒற்றைவாடை வீதி

காஞ்சீபுரம்.

## திருவூறல்புராணம்.

தக்கோலம் கலியாணமண்டபத் தெரு பஞ்சாயத்துத் தலைவர் இல்லத்தில் கு. ஆ. மாணிக்க முதலியார் நினைவு மலராகத் "திருவூறல் புராணம்" 1–4–77, இரவு 7 மணிக்குப் பண்டிதநடேசனுரால் வெளியிடப்பட்டது. மா.பொ. அண்ணமலை முதலியார் "வாலி மோட்சம்" பற்றிப் பேசினுர்.

ஆ.த. சச்சிதானந்தம்.

223



# கம்பர் இயற்றிய சரசுவதி அந்தாதி

## மூலமும் உரையும்

'செந்தமிழ்ச் செல்வன்'

புலவர் திரு. சிக்கல் சி. சானகிராமன் அவர்கள்
தெற்கு வீதி, சிக்கல் (அஞ்சல்)
நாகை (வட்டம்) தஞ்சை மாவட்டம்

(21) அடிவேதம் நானும் சிறப்பு ஆர்ந்த வேதம் அனைத்தினுக்கும்
முடிவே, தவள முளரி மின்னே, முடியா இரத்ன
வடிவே, மகிழ்ந்து பணிவார் தமது மயல் இரவின்
விடிவே, அறிந்து என்னை ஆள்வார் தலந்தனில் வேறு இலையே

உரை விளக்கம்;-

வேதங்கள் எல்லாவற்றிற்கும் முடிந்த முடிபான கருத்தாக உள்ளவளே, வெண்தாமரை மலரில் மின்னற் கொடி போல விளங்குபவளே, அழிவற்ற மணியின் ஒளி மிகுந்த வடிவம் உடையவளே, அன்பு கொண்டு வணங்கும் அடியார்களின் அறியாமையாகிய இருளை நீக்கும் சூரியனைப் போன்றவளே; என் இழிந்த நிலையினை அறிந்து, என்னை அடிமையாக ஏற்று என்னைக்காத்தருள்பவர்' உன்னைத்தவிர இவ்வுலகில் வேறு எவரும் இல்லை.

(22) வேறுஇலையென்று, உன் அடியாரிற் கூடி விளங்கும் நின்பேர்
கூறலை, போனும் குறித்து நின்றேன்; ஐம்புலக் குறும்பாம்
ஆறலை கள்வர் மயக்காமல், நின் மலர்த்தாள் நெறியில்
சேறலை ஈந்தருள்; வெண்தாமரை மலர்ச்சேயிழையே.

உரை விளக்கம்:-

வெண் தாமரை மலரில் வீற்றிருப்பவளே, செவ்விய அணிகலன்களை உடையவளே ', நின்னையன்றி வேறு பற்றுக் கோடு இல்லை என்று தெளிந்து, உனது அடியார்களுள் நானும் ஒருவனுகச் சேர்ந்து, சிறப்புப் பெற்று விளங்கும் நினது திருப்பெயர்களைத் துதித்தலைக் கூறிக் கொண்டு நின்றேன்! ஐம்பொறிகளின் பொல்லாங்குகளாகிய வழிப்பறி கள்வர்கள், என்னை மயக்கி வருந்தச் செய்யாதபடி எனக்கு உன்னுடைய திருவடித்தாமரைகளின் அருள் நெறியிற் செல்லும் திறத்தினை அளித்தருள்வாயாக!

(23) சேதிக் கலாம் தர்க்க மார்க்கங்கள்; எவ்வெவர் சிந்தனையும்
சோதிக்கலாம்; உறப் போதிக்கலாம்;சொன்னதே துணிந்து
சாதிக்கலாம், மிகப்பே திக்கலாம், முத்திதான் எய்தலாம்
ஆதிக்கலா மயில் வல்லி பொற்றுளை அடைந்தவர்க்கே.

உரை விளக்கம்:-

கலைமகளின் அழகிய திருவடிகளை அடைகின்ற பேறு பெற்றவர்களுக்கு; தம்மை எதிர்த்து வாதப் போர் செய்பவர்களின் வாத நெறிகளை வென்று துணித்தல் இயலும் எத்தகையவருடைய மனத்தின் நிலைமையையும் ஆராய்ந்து அறிதல் இயலும் எல்லோர்க்கும் எல்லாப் பொருள்களையும் தெளிவுறச் சொல்லி அறிவுறுத்துதல் இயலும்; தான் கூறிய பொருளையே முடிந்த முடிபாகத் துணிந்து நிலைநாட்டுதற்குரிய ஆற்றலும் திறமையும் அமையும். தமது கொள்கைக்கு மாறுக மாற்றுர் சொன்ன கருத்துக்களையெல்லாம் மறுத்து ஒழிக்கும் வன்மை உண்டாகும். இவற்றிற்கெல்லாம் மேலாக வீடு பேற்றின்பத்தையும் எளிதில் அடைதல் இயலும்.

(24) அடையாள நாள் மலர் அங்கையில், ஏடும் மணி வடமும்
உடையாளை நுண்ணிடை ஒன்றும் இலாளை, உபநிடதப்
படையாளை, எவ்வுயிரும் படைப்பாளைப், பதும நறுந்
தொடையாளை, அல்லது மற்று, இனியாரைத் தொழுவதுவே!

உரை விளக்கம்:-

அழகிய கைகளில் ஞான நூலாகிய ஏடும், செபமாலையாகிய மணிவடமும், ஆகியவற்றை உடையவளும்; நுண்ணிய இடை சிறிதும் இல்லாதவளும், உபநிடதமாகிய படைக் கருவியை உடையவளும், எல்லா உயிர்களையும் படைப்பவளும், மணம் கமழ்கின்ற தாமரைமாலையை உடையவளும் ஆகிய கலைமகளை அல்லாமல், வேறு யாரை நான் இனி வணங்குவது? கலைமகளையே யான் வணங்கி உய்வேன்.

(25)

தொழுவார், வலம் வருவார், துதிப்பார், தம்தொழில் மறந்து
விழுவார், அருமறை மெய் தெரிவார், இன்பமெய் புளகித்து
அழுவார், இன்னுங் கண்ணில் நீர் மல்குவார், என் கண், ஆவது என்னே ?
வழுவாத செஞ்சொற்கலை மங்கைபால் அன்பு வைத்தவரே.

உரை விளக்கம்:-

தவறு அமையாத செவ்விய சொற்களை உடைய கலைமகளின் பால் அன்பு வைத்த அடியவர்கள், அக்கலைமகளைத் தொழுவார்கள், வலம் வருவார்கள்; துதிப்பார்கள், தம் வயம் இழந்தும், தமது செயலை மறந்தும், அவளையே விரும்பி வழிபடுவார்கள், அரிய வேதங்களின் உண்மைப் பொருளை உணர்வார்கள், அருளின்ப அனுபவத்தால் உடலில் மயிர் சிலிர்க்கப் பெற்று ஆனந்தக் கண்ணீர் விடுவார்கள்; இத்தகைய செயல்களுள் எதுவும் என்னிடத்து உண்டாகவில்லையே? யான் என் செய்வேன் ?

(26)

வைக்கும் பொருளும், இல்வாழ்க்கைப் பொருளும், மற்று எப்பொருளும்
பொய்க்கும் பொருளும் அன்றி, நீடும் பொருள் அல்ல, பூதலத்தின்
மெய்க்கும் பொருளும், அழியாப் பொருளும், விழுப் பொருளும்
உய்க்கும் பொருளும், கலைமான் உணர்த்தும் உரைப் பொருளே,

உரை விளக்கம்:-

தேடிப்பாதுகாத்து வைக்கும் பொன்மணிநெல் போன்ற பொருள்களும், உலகியல் வாழ்க்கைக்குரிய உற்றார் உறவினர் நண்பர் முதலிய பொருள்களும், மற்றும் உள்ள எல்லாப் பொருள்களும், நிலையின்றி அழியும் பொருள்களேயல்லாமல் அழிவின்றி நெடுங்காலம் நிலைத்து நிற்கும் பொருள்கள் அல்ல. இந்நிலவுலகத்தில் அழியாது நிலைத்து நிற்கும் பொருளும், மறுமையில் அழிவில்லாத சிறந்த பொருளும், எல்லாவற்றிற், கும் மேலான வீடு பேறு ஆகிய பொருளும் அதன் கண் கொண்டு சேர்க்கின்றதத்துவப்பொருளும்,கலைகளுக்கெல்லாம் உரிய தெய்வமாகிய கலைமகள் உணர்த்துகின்ற சொற்களின் பொருளேயாகும்.

(27) பொருளால் இரண்டும் பெறலாகும் என்ற பொருள் பொருளோ
மருளாத சொற்கலை வான் பொருளோ? பொருள்; வந்து வந்தித்து
அருளாய் விளங்குமவர்க்கு ஒளியாய், அறியாதவர்க்கு
இருளாய் விளங்கும், நலங்கிளர் மேனி இலங்கிழையே.

உரை விளக்கம் :—

தன்னைப் புகலடைந்து தொழுது வணங்கித், தன் திரு வருளுக்கு இலக்காகி விளங்குகின்றவர்களுக்கு ஒளியாத் தோன்றியும், தனது அருமை பெருமைகளை உணராதவர் களுக்குப் புலனாகாமல் மறைந்து நின்றும் விளங்குகின்ற, ஒளிமிக்க திருமேனியை உடைய கலைமகளே! பொருளினால் அறமும் இன்பமுமாகிய இரு பொருள்களையும் அடையலாம் என்று சிறப்பித்துக் கூறப்படும் செல்வப் பொருளோ? அன்றி அறியாமையாகிய மயக்கத்தை ஒழிக்கின்ற சொற்களை உடைய கல்விப் பொருளோ? இவற்றுள் எது சிறந்தப் பொருள்? என்று நீ அருளிச் செய்க.

(28) இலங்கும் திருமுகம்; மெய்யிற் புளகம் எழும்; கண்கள் நீர்
மலங்கும்; பழுதற்ற வாக்கும் வலிக்கும்; மனம் மிகவே
துலங்கும்; முறுவல் செயக்களி கூறும்; சுழல் புனல் போல்
கலங்கும் பொழுது தெளியும்; சொல்மானைக் கருதினர்க்கே

உரை விளக்கம் :—

சொற் பொருள்களுக்குரிய மான்போன்ற கலைமகளைத் தியானிப்பவர்களுக்கு, அழகிய முகம் விளங்கும்; உடம்பில் மயிர்ச் சிலிர்ப்பு எற்படும்; கண்களில் இன்பக் கண்ணீர் தளும்பும்; குற்ற மற்ற வாய்ச் சொற்கள் உறுதி பெற்று நிகழும்; மனம் மிகுதியாகத் தெளிவு பெறும்; புன்முறுவல் பூக்கும்படி மகிழ்ச்சியான உணர்வுகள் எப்போதும் நிலவும்; சுழல்கின்ற நீர் வெள்ளம் போல் ஏதேனும் கலக்கங்கள் நிகழி னும், அக்கலக்கங்கள் எல்லாம் ஒழிந்து நீங்கிவிடும்

(29) கரியார் அளகமும், கண்ணும், கதிர் முலைக் கண்ணும் செய்ய
சரியார் கரமும், பதமும், இதமும், தவளாறும்
புரி யார்ந்த தாமரையும்; திருமேனியும்; பூண்பனவும்
பிரியாது என் நெஞ்சினும் நாவினும் நிற்கும்; பெருந்திருவே

உரை விளக்கம்:-

அன்பர்களுக்குப் பெருஞ் செல்வத்தைத் தருபவளே; உனது கருநிறம் பொருந்திய கூந்தலும். கண்களும், ஒளிமிக்க தனங்களும், சிவந்த வளையல்கள் அணிந்த கைகளும், திருவடி களும், உதடுகளும், வெண் தாமரை மலரும், அழகிய திரு மேனியின் நிறமும், நினது அணிகலன்களும், இடையறுது எப்பொழுதும் என் நெஞ்சினும், நாவினும் நிலைபெற்று நிற்கும்.

(30) பெருந்திருவும் சயமங்கையும் ஆகி, என் பேதை நெஞ்சில்
இருந்தருளும் செஞ்சொல் வஞ்சியைப் போற்றில்' எல்லா உயிர்க்கும்
பொருந்திய ஞானந்தரும், இன்ப வேதப்பொருளும் தரும்
திருந்திய செல்வம் தரும்; அழியாப்பெருஞ்சீர் தருமே

உரை விளக்கம்:—

பெருமை மிக்க திருமகளும், வெற்றி மகளுமாக விளங்கி என்னுடைய அறியாமை மிக்க நெஞ்சில் இருந்து அருள்கின்ற செஞ்சொல் வஞ்சியாகிய கலைமகளைத்துதித்தால் அவள் அன்பர்கள் எல்லாருக்கும் ஞானத்தைத் தருவாள்; இன்பத்தை விளைவிக்கின்ற வேதப்பொருளை விளக்கியருள்வாள்; திருத்தமான கலைஞானங்களை அளித்தருள்வாள்; இவற்றிற்கெல்லாம் மேலாக அழிவற்ற பெரிய சிறப்பு வாய்ந்த வீடு பேற்றின்பத்தையும் வழங்கி நலம் புரிவாள்.

முற்றும்

உ

சிவ சிவ

சிவாய நமவெனச் சித்தம் ஒருக்கி
அவாயம் அறவே அடிமைய தாக்கிச்
சிவாய சிவசிவ வென்றென்றே சிந்தை
அவாயங் கெடநிற்க ஆனந்த மாமே.